Registered as a NewsPaper

விலை ரூபா7.00

# ஈழநாதம்

மக்கள் நாளிதழ்

பக்கங்கள் – 08

நாதம் 15 | திருவள்ளுவர் ஆண்டு 2035 | மாசி –16 | 28–02–2004 | சனிக்கிழமை | ஓசை –010

S.M கோல்ட் ஹவுஸ்

காலத்தால் அழியாத
கண்கவர் தங்க
நகைகளை சுத்தமான
22 கரட் தங்கத்தில்
தெரிவு செய்து
பெற்றுக்கொள்ள



S.M கோல்ட் ஹவுஸ்
இல:-46A, தர்மலிங்கம் வீதி,
வவுனியா.
T.P: 024-222 4247
(ச-9205) 077-6059672

# மரண வீட்டிற்குச் சென்று திரும்பிக் கொண்டிருக்கையில் வாகனம் குடை சாய்ந்ததில் இருவர் பலி; 14பேர் காயம்!

## முறிகண்டி இந்து புரத்தில் நடந்த துயரம்

(அலுவலக நிருபர்)

**விபத்தில் சிக்கி மரணமான இளைஞனின் மரணச் சடங்கில் கலந்துவிட்டுத் திரும்பிச் சென்று கொண்டிருக்கையில் வாகனம் குடைசாய்ந்ததில் அதில் பயணம் செய்த இருவர் பலியானதுடன் ஏனையவர்கள் அனைவரும் காயமடைந்தனர். மேற்படி சம்பவம் நேற்று முன்தினம் இரவு 11 மணியளவில் முறிகண்டி இந்துபுரம் பகுதியில் இடம் பெற்றது.**

பிரதான வீதியை விட்டு விலகிய சிறிய ரக கன்டர் வாகனம் ஒன்று பள்ளத்தில் தலைகீழாக குடை சாய்ந்ததில் இருவர்பலியானதுடன் வாகனத்தில் பயணித்த அனைவரும் படுகாயங்களுக்குள்ளான நிலையில் கிளி.மாவட்ட வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்றுவருகின்றனர்.

இச்சம்பவம் குறித்து மேலும் தெரியவருகையில்; கடந்த 25 ஆம் திகதியன்று புளியங்குளம் பகுதியில் இடம்பெற்ற வீதிவிபத்தில் பலியான ஜெகன் என்பவரது மரணச் சடங்கில் கலந்து கொண்டு விட்டு எல்ப் ரக கன்டர் வாகனத்தில் 16 பேர் புளியங்குளம் நோக்கி பயணித்த போது நேற்று முன்தினம் இரவு 11 மணியளவில் 153 ஆம் கட்டை இந்துபுரப்பகுதியில் மேற்படி சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இச்சம்பவத்தின் போது வாகனத்தின் முன் இருக்கையில் இருந்து பயணித்த விளக்குவைத்த குளத்தைச் சேர்ந்த சுப்பிரமணியம் (வயது 64) என்பவர் ஸ்தலத்திலேயே பலியானார். மற்றும் காயங்களுக்குள்ளான 15 பேரும் அப்பகுதி மக்களின் உதவியுடன்

(8ஆம் பக்கம் பார்க்க)



தடம்புரண்ட வாகனம்



காயமடைந்த ஒருவர்

## போர் நிறுத்த க.கு.தலைவர் இன்று வன்னிக்கு வருகை

போர் நிறுத்தக்கண்காணிப்புக் குழுத்தலைவர் ரொண்ட்புறாவ் ஹெளவ்டே இன்று கிளிநொச்சிக்கு வருகை தருகிறார்.

அவர் அரசியல் துறைப்பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் அவர்களைச் சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தவுள்ளார்.

இதன் போது எதிர்வரும் தேர்தலில் வன்னிப்பகுதியிலுள்ள மக்கள் அனைவரும் சுமுகமான முறையில் வாக்களிப்பதற்கு ஏற்ற நடைமுறைகள் குறித்து ஆராயப்படலாம் எனத் தெரிய வருகிறது. கண்காணிப்புக்குழுத் தலைவராக ஹெளவ்டே மீண்டும் பதவியேற்ற பின் முதல் தடவையாக அவர் வன்னிக்கு வருகை தருவது குறிப்பிடத்தக்கது.

## கிளி.தபால் சிற்றூழியர் போராட்டம் இடைநிறுத்தம்

கிளிநொச்சி தபால் நிலைய பதிற்கடமைச் சிற்றூழியர் பத்து வருடங்களுக்கு மேல் நியமனம் வழங்கப்படாமைக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் வகையில் திங்கட்கிழமை நடத்த இருந்து தொழிற்சங்க நடவடிக்கையைத் தற்காலிகமாக இடைநிறுத்தியுள்ளனர்.

தேர்தல் காலத்தில் அஞ்சலகப் பணிகளின் முக்கியத்துவத்தினை உணர்ந்து தற்காலிகமாக இடைநிறுத்தியுள்ளதாக அவர்கள் அறிவித்துள்ளனர்.

எனினும் தங்கள் கோரிக்கையை பரிசீலித்து நீதிவழங்குமாறு அஞ்சல் அதிபர் நாயகத்தினை அவர்கள் கேட்டுள்ளனர்.

## சரித்த ரத்வத்த பதவி நீக்கம்?

(கொழும்பு)

கடந்த நாட்களில் திரைசேரியின் பிரதம செயலாளர் சரித்த ரத்வத்தவால் ஊடகங்களுக்கு சனாதிபதிக்கு அபகீர்த்தி ஏற்படும் வகையில் செய்திகள் வெளியிட்டதாகக் குற்றம்சாட்டி 24 மணித்தியாலங்களுக்கிடையில் தமக்கு விளக்கமளிக்குமாறு சனாதிபதி சந்திரிகா

(8ஆம் பக்கம் பார்க்க)

## தேர்தல் வன்முறைச் சம்பவங்களுடன் தப்பி ஓடிய படையினருக்குத் தொடர்பு

### சிறிலை. பொலிஸ் தலைமையகம் தெரிவிப்பு

பல்வேறு பிரதேசங்களில் ஏற்பட்ட தேர்தல் வன்முறை சம்பவங்களுடன் சிறிலங்காவின் முப்படைகளில் இருந்து தப்பிச் சென்றவர்கள் சம்பந்தப்பட்டிருந்தமை தெரியவந்துள்ளதாக சிறிலங்கா பொலிஸ் தலைமையகம் தெரிவித்துள்ளது.

இதனால் இராணுவத்திலிருந்து தப்பியோடியவர்கள்பற்றித் தகவல்களை வழங்குமாறு பொலிஸ் தலைமையகம் மக்களிடம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

இதேவேளை நேற்றுக்காலை ஆறு மணியுடன் முடிவடைந்த இருபத்திநான்கு மணித்தியாலத்திற்குள் தேர்தல் வன்முறைகள் தொடர்பான பன்னிரண்டு முறைப்பாடுகள் கிடைத்துள்ளதாக தேர்தல் செயலகம் தெரிவித்துள்ளது.

இதேவேளை இதற்கு மேலதிகமாக தேர்தல் சட்டத்தை மீறியமை தொடர்பாக இரண்டு முறைப்பாடுகளும் கிடைத்துள்ளதாகவும் தேர்தல் செயலகம் தெரிவித்துள்ளது.

இந்த முறைப்பாடுகளுள் ஐக்கியதேசியக்கட்சி நான்கு

(8ஆம் பக்கம் பார்க்க)

## எவ்வித முன்நிபந்தனைகளுமின்றி ஐ.ம.சு.மு.புலிகளுடன் பேசத்தயார்

### ஊடகவியலாளர் மாநாட்டில் கதிர்காமர்

விடுதலைப் புலிகளுடன் எவ்வித முன்நிபந்தனைகளும் விதிக்காது ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி பேச்சுவார்த்தை நடத்த தயாராக இருப்பதாக ஊடகத்துறை அமைச்சரும் சனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகருமான லக்ஷ்மன் கதிர்காமர் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி நேற்று நடத்திய ஊடகவியலாளர் மாநாட்டிலேயே கதிர்காமர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

ஊடகவியலாளர் ஒருவர் விடுதலைப் புலிகளுடனான பேச்சுவார்த்தை குறித்து எழுப்பிய கேள்வி ஒன்றிற்கு பதிலளிக்கும் போதே கதிர்காமர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

கதிர்காமர் இது தொடர்பாக மேலும் தெரிவிக்கையில் இந்த விடயத்தில் எந்த முன்நிபந்தனைகளும் இல்லை எந்த எந்த விடயங்களை செய்யாதுவிட்டால் பேச்சுவார்த்தை மேசைக்கு நாம் வரமாட்டோம் என்பது தான் முன்நிபந்தனை என்ற ஆங்கிலப் பதத்தின் அர்த்தமாயின் அவ்வாறான எந்த முன்நிபந்தனைகளும் இங்கில்லை.

எனினும் பேச்சுவார்த்தைகள் ஆரம்பிக்கும்போது பல விடயங்கள் குறித்து ஆராயப்படும். எந்த

(8ஆம் பக்கம் பார்க்க)

## யாழ். கூட்டமைப்பு வேட்பாளர் நாளை வேலணையில் அறிமுகம்

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு சார்பாக யாழ்.மாவட்டத்தில் போட்டியிடவுள்ள வேட்பாளர்களைதீவகமக்களுக்கு அறிமுகப்படுத்தும் விசேட நிகழ்வு ஒன்று நடைபெறவுள்ளது.

நாளை வேலணை துறையூர் நகரசபை மண்டபத்தில் இடம் பெறவுள்ள இம்மாநாட்டில் யாழ். மாவட்ட வேட்பாளர்கள், அரசியல் துறைப் பிரமுகர்கள், போராளிகள், பல்கலைக்கழக மாணவர்கள், ஆதரவாளர்கள் எனப் பலர் கலந்து கொள்ளவுள்ளனர்.

இதன்போது எதிர்வரும் ஏப்பிரல் 2ஆம் திகதி நாடாளுமன்றத் தேர்தலில் பங்குபற்றவுள்ள வேட்பாளர் அறிமுகமும் மக்கள் ஆதரவைத் திரட்டும் நடவடிக்கைகள் மற்றும் பிரச்சார நடவடிக்கைகள் குறித்து ஆராயப்படும்.

அத்துடன் பொங்குதமிழ் கோஷங்களுடன் தேர்தல் பிரச்சார நடவடிக்கைகளை முன்னெடுப்பது தொடர்பாகவும் ஆராயப்படும் (33)

## போராளிகளையும் பொதுமக்களையும் ஊர்காவற்றுறையில் ஈ.பி.டி.பி.மிரட்டல்

(யாழ்ப்பாணம்)

ஊர்காவற்றுறையிலுள்ள விடுதலைப்புலிகளின் அரசியல் துறை பணிமனைக்கு முன்பாக நின்ற போராளிகளையும், பொது மக்களையும் அப்பகுதியால் சென்ற ஈ.பி.டி.பி. யினர் துப்பாக்கியைக் காட்டி அச்சுறுத்த முயன்றனர் இதனால் பொதுமக்களுக்கும் ஈ.பி.டி.பி. யினருக்குமிடையே வாக்குவாதம் ஏற்பட்டது.

ஊர்காவற்றுறை அரசியல் துறைப்பணிமனைக்குச் சமீபமாக நேற்று மாலை இடம்பெற்ற இச்சம்பவம் பற்றி தெரியவருவதாவது:

விடுதலைப் புலிகளின் மேற்படி பணிமனை வாயிலை அண்மித்து நின்றிருந்த தீவகக்கோட்ட அரசியல்த்துறை சிறப்புப் பொறுப்பாளர் கண்ணன் உட்பட சில போராளிகள் மக்களுடன் பேசியவாறு நின்றிருந்த போது

அப்பணிமனைமுன்பாக உள்ள வீதியால் சென்ற ஈ.பி.டி.பி. உறுப்பினர்கள் சிலர் தாம் சென்ற வாகனத்துள் இருந்தவாறே தமது துப்பாக்கிகளைப் போராளிகளையும் பொதுமக்களையும் நோக்கி நீட்டி அச்சுறுத்தியுள்ளதுடன் வீண்வாக்குவாதத்தினை உருவாக்கும் முயற்சியிலும் ஈடுபட்டனர்.

இதனால் ஆத்திரமடைந்த அப்பகுதி மக்கள் அவ் ஈ.பி.டி.பி.யினருடன் வாக்குவாதத்திற்கு தயாரானவேளை விடுதலைப் புலிகள்

(8ஆம் பக்கம் பார்க்க)

# தேசிய பெருவிளையாட்டு விழா இறுதிநாள் நிகழ்வுகள்

(அலுவலகசெய்தியாளர்)

மூன்றாவது தமிழீழ தேசியவிளையாட்டு விழாவின் இறுதி நாள்நிகழ்வுகள் நேற்று கிளி.பொது விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றன. தேசியக்கொடியை தமிழீழ காவல்துறைப் பொறுப்பாளர் பா.நடேசன் ஏற்றிவைத்தார். கிளிநொச்சி மாவட்ட விளையாட்டு ஆலோசகர் கனகரட்ணம், வடக்கு-கிழக்கு மாகாண விளையாட்டுத்துறை அமைச்சின் உதவிப் பணிப்பாளர் எ.டபிள்யூ. விமலராஜன், இவ்விளையாட்டு விழாவின் பிரதமபதிவாளர் பரஞ்சோதி, யாழ். மாவட்ட மெய்வல்லுநர் பயிற்றுனர் கிருபாகரன், முல்லை. மாவட்ட விளையாட்டு அபிவிருத்திக்குழுத் தலைவர் ஜான், அம்பாறை மாவட்ட விளையாட்டு அதிகாரி அப்துல் ஜவ்வார், யாழ். கிரிக்கெட் அணி உபதலைவர்கள் லக்ஷ்மி காந், மட்டு கிரிக்கெட் அணித்தலைவர் அருண்பிரசாத், தமிழீழ விளையாட்டுத்துறை மகளிர் பொறுப்பாளர் அருவி ஆகியோர் மாவீரர் உருவப்படங்களுக்கு ஈகச்சுடரேற்றி மலரஞ்சலி செலுத்தினர்.

அகவணக்கத்தைத் தொடர்ந்து யாழ்-மட்டு அணி வீரர்களுக்கான கிரிக்கெட் இறுதிப்போட்டியில் கலந்து வீரர்கள் பா.நடேசன் அவர்களுக்கு அறிமுகம் செய்து வைக்கப்பெற்றனர். நாணய சுழற்சியில் வெற்றி பெற்ற மட்டு. அணியினர் முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தனர். 29.3 ஓவரில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 133 ஓட்டங்களைப் பெற்றது. மட்டு அணி ஜெயசீலன் ஒரு சிக்ஸர் மூன்று பவுண்டரி உட்பட 21 ஓட்டங்களைப் பெற்றார். பிரபாகரன் மூன்று பவுண்டரிகள் உட்பட 20 ஓட்டங்களையும மோசஸ் ஒரு சிக்ஸர் உட்பட17 ஓட்டங்களையும் பெற்றனர். பந்து வீச்சில் ஜெயரூபன் 16 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்டுக்களையும், குணதாஸ் 8 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுக்களையும், ஜதார்த்தன் 19 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர்.

134 என்ற வெற்றி இலக்கோடு தனது துடுப்பாட்டத்தை ஆரம்பித்த யாழ். அணி 18.4 ஓவரில் 3 இலக்குகளை இழந்து வெற்றி இலக்கை எட்டியது. 7விக்கெட்டுக்களால் வெற்றி பெற்ற யாழ். அணி, 2004 ஆம் ஆண்டின் கேணல் சங்கர் நினைவு வெற்றிக்கேடயத்தை சுவீகரித்தது. தனஸ்காந் இரு சிக்ஸர்கள் 4 பவுண்டரி உட்பட36 ஓட்டங்களையும், அணித்தலைவர் கௌரிபாலன் 5பவுண்டரி உட்பட 25 ஓட்டங்களையும், சிவராசா மூன்றுபவுண்டரி உட்பட ஆட்டமிழக்காமல் 21 ஓட்டங்களையும் பெற்றனர். பந்து வீச்சில் ஜெயசீலன், ரூபராஜ், அருண்பிரசாத் தலா ஒரு விக்கெட்டை கைப்பற்றினர். இச்சுற்றுப் போட்டி தமிழீழ வைப்பகத்தினரின் அனுசரணையுடன் நடைபெற்றது. இப்போட்டிக்கு நடுவர்களாக திருவாளர்கள் கிருபாகரன், முருகவேல் ஆகியோருடன் நிதர்சனம் நிறுவனத்தின் அனுசரணையுடன் தொலைக்காட்சி நடுவராக இ.சிறிதரனும் கடமையாற்றினர். (சோ)



# த.கூட்டமைப்பிற்கு ஆதரவு வழங்கி ஒன்றுபட்டு செயற்படுவோம்

## - தீவக தே.எ. பேரவை தீர்மானம்

(தீவகம்)


எதிர்வரும் தேர்தலில் ஒன்றுபட்ட கொள்கையின் பின்னால் ஒற்றுமையுடன் அணிதிரள்வோம் என தீவக தேசிய எழுச்சிப் பேரவையினர் தீர்மானம் எடுத்துள்ளனர்.

நேற்று முன்தினம் நடைபெற்ற தீவகத் தேசிய எழுச்சிப் பேரவையின் இம் மாநாட்டில் யாழ். மாவட்ட அரசியல்துறை துணைப் பொறுப்பாளர் செம்மணன், ப.கனகலிங்கம், பல்கலைக் கழக மாணவர் ஒன்றியத்தைச் சேர்ந்த ப.கிருஸ்ணகுமார் ஆகியோர் கலந்து கொண்டிருந்தனர்.

எதிர்வரும் பொதுத் தேர்தல் தொடர்பாக பிரஸ்தாபிக்கப்பட்ட இம் மாநாட்டின் நிறைவில் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

அத்துடன் எமது மக்களின் அரசியல் அபிலாசைகளை உலக அரங்கிலிருந்து எடுத்துரைக்கும் விதமாக எதிர்வரும் பொதுத் தேர்தலில் கூட்டமைப்பினருக்கு ஆதரவை வழங்கி உணர்வை வெளிப்படுத்துவதுடன்,

தேர்தலில் வாக்களிப்பது தொடர்பாக மக்களுக்கு விழிப்புணர்வினை ஏற்படுத்தும் விதத்தில் பிரச்சாரங்களை முன்னெடுப்பது எனவும் தீர்மானங்கள் நிறை வேற்றப்பட்டதுடன் இம்மாநாட்டில் *கலந்திருந்தோரால் ஏகமனதாக இவையாவும்ஏற்றுக் கொள்ளப்பட்டது. (33)



கடந்த புதன்கிழமை காலை கிளிநொச்சி கனகபுரம் சீர்திருத்தப் பிரிவிலும், அதேநாள் மாலை புதுக்குடியிருப்பு ஆனந்தபுரம் சீர்திருத்தப்பிரிவிலும் சர்வதேச செஞ்சிலுவைச்சங்கப் பிரதிநிதிகள் அங்கு கடமையாற்றும் அதிகாரிகள், உறுப்பினர்களுக்கு ஐ.சி.ஆர்.சி.யின் தோற்றம், செயற்பாடுகள் தொடர்பாக விளக்கமளித்தனர்.

# மன்னாரில் தீக்கிரை

(மன்னார்)

மன்னாரில் சின்னக்கடைப் பகுதியில் நேற்று முன்தினம் அதிகாலை தேர்தல் வன்முறையில் வாகனம் ஒன்று தீயிடப்பட்டுள்ளது என்று மன்னார் பொலிஸ் முறைப்பாடு செய்துள்ளது. ஈ.பி.டி.பி.யினர் தேர்தல் பிரச்சார நடவடிக்கைகளில் ஈடுபட்டு திரும்பிக் கொண்டிருந்த வேளை அவர்கள் பயணம் செய்த வாகனமே தீயிடப்பட்டதாக கூறப்படுகின்றது. தேர்தலுக்கான திகதி குறிப்பிடப்பட்ட பின்னரும் வேட்பு மனுக்கள் தாக்கல் செய்யப்பட்ட பின்னரும் வன்னியில் ஏற்பட்டுள்ள முதலாவது தேர்தல் வன்முறைச் சம்பவம் இதுவே ஆகும் என்று தெரிவிக்கப்படுகின்றது.


அக்கராயன் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் [வரையறுக்கப்பட்டது]

## கிளைக்குழு உறுப்பினர் தெரிவு தொடர்பான அறிவித்தல் - 2004

வடக்கு கிழக்கு மாகாண கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளரும், கூட்டுறவுச் சங்கப் பதிவாளரும் அவர்களினால் அங்கீகரிக்கப்பட்டதும் 1998.05.19 ஆம் திகதி 1028/06 இலக்கங்கொண்ட அதிவிசேட வர்த்தகமானியில் வெளியிட்டதுமான வடக்கு-கிழக்கு மாகாண எல்லைக்குட்பட்ட பகுதியில் இயங்கிவரும் வரையறுக்கப்பட்ட ப.நோ.கூ.சங்கத்தின் கிளைக்குழுக்களைத் தெரிவு செய்வதற்கான விதிகளுக்கமைய மேற்படி சங்கத்தின் சகல கிளைகளுக்குமான கிளைக்குழுத் தெரிவுக்கான கிளைப் பொதுச்சபைக் கூட்டங்கள் பின்வரும்காலஅட்டவணையின் படி நடைபெறுவதற்கான ஒழுங்குகள் கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் கிளிநொச்சி அவர்களால் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

திகதி:- 07.03.2004 ஞாயிற்றுக்கிழமை
நேரம்:- மு.ப.9.30 மணி

| தொ.இல | கிளை இல | கிளை | கிளைப் பொதுச்சபைக்கூட்டம் நடைபெறும் இடம் |
|---|---|---|---|
| 01 | 01 | ஸ்கந்தபுரம் | ஸ்கந்தபுரம் இல.01.அ.த.க. பாடசாலை |
| 02 | 02 | கோணவில் | அக்கராயன் அ.த.க. பாடசாலை |
| 03 | 03 | யூனியன்குளம் | யூனியன்குளம் அ.த.க. பாடசாலை |
| 04 | 04 | அக்கராயன் குளம் | அக்கராயன் மகாவித்தியாலயம் |
| 05 | 05 | வன்னேரிக்குளம் | வன்னேரிக்குளம் மகாவித்தியாலயம் |
| 06 | 06 | ஆனைவிழுந்தான் குளம் | ஆனைவிழுந்தான் அ.த.க. பாடசாலை |
| 07 | 07 | கண்ணகைபுரம் | கண்ணகைபுரம் அ.த.க. பாடசாலை |
| 08 | 08 | ஊற்றுப்புலம் | ஊற்றுப்புலம் அ.த.க. பாடசாலை |
| 09 | 09 | ஸ்கந்தபுரம் மேற்கு | ஸ்கந்தபுரம் இல. 02 அ.த.க. பாடசாலை |

இது சம்பந்தமான மேலதிக தகவல்களை கிளை நிலையங்களிலும் தலைமை அலுவலகத்திலும் பார்வையிட்டு கிளைக்குழுத் தேர்தலை நடாத்துவதற்கு ஒத்துழைப்பு நல்குமாறு கேட்டுக்கொள்கிறோம்.

கா.சுரேந்திரன்,
பொதுச்செயலர்,
அக்கராயன் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம்,
அக்கராயன்குளம்.

(சி-9403)

# கெயிட்டிக்கு அமைதிப்படையை அனுப்புக அரேபிய நாடுகள் ஐ.நா.விடம் கோரிக்கை

-எதையும் செய்ய முடியாதென பாதுகாப்புச்சபை அறிவிப்பு

(ஜெனீவா)

**கெயிட்டியில் சட்டத்தையும், ஒழுங்கையும் மீண்டும் நிலை நாட்டுவதற்கு சர்வதேச அமைதிப்படையொன்று அங்கு அனுப்ப வேண்டுமென அரேபிய நாடுகள் பாதுகாப்புச் சபையிடம் வேண்டுகோள் விடுத்துள்ளன.**

ஜெனிவாவில் அரேபிய நாடுகளுக்கான அமைச்சர்கள் பாதுகாப்புச் சபையில் உரையாற்றுகையில் :- கெயிட்டியில் நிலைமை படுமோசமாகவுள்ளதெனவும் பாதுகாப்புச்சபை உடனடி நடவடிக்கை அவசியமெனவும் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை, இவ்விடயம் தொடர்பாக எந்தவோர் நடவடிக்கையையும் மேற்கொள்ள முடியாதென பாதுகாப்புச்சபை அறிவித்துள்ளது.

இம் மாதம் 05 ஆம் திகதி ஆரம்பமான கிளர்ச்சியாளர்களின் போராட்டத்தினால் இதுவரை 60 இற்கும் அதிகமானோர் உயிரிழந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கெயிட்டின் வடபகுதித் துறைமுக நகரமான ஹெப்சிட்டி கிளர்ச்சியாளர்கள் வசமாகியுள்ள நிலையில், தலைநகர் போர்ட் ஓபிரின்ஸ்சை கைப்பற்றி விடுவோமென்றும் அவர்கள் எச்சரிக்கை செய்துள்ளார்கள்.

அத்துடன் கெயிட்டி சனாதிபதிக்கு ஆதரவானவர்கள் மீதும் இவர்கள் தாக்குதலும் நடத்தி வருகின்றனர். இதனால் அங்கு வசிக்கும் வெளிநாட்டவர்கள் நாட்டைவிட்டு வெளியேற ஆரம்பித்துவிட்டார்கள். அமெரிக்கர்கள் உட்படக் கனேடியர்கள், டொமினிக்கன் குடியரசு பிரஜைகள், ஐரோப்பிய நாடுகளைச் சேர்ந்தவர்களும் அங்கு வசித்து வருகின்றனர்.

இதேவேளை நான் பதவியிலிருந்து விலகமாட்டேன். 2006 ஆம் ஆண்டுவரை பதவியிலிருப்பேன் எனக் கெயிட்டி சனாதிபதி அரிஸ்டைட் சூளுரைத்துள்ளார்.

தொலைக்காட்சி ஒன்றிற்குப் பேட்டியளிக்கையிலேயே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அரிஸ்டைட் பதவியிலிருந்து இறங்குவதே கெயிட்டியின் பிரச்சினையைத் தீர்க்க ஒரேவழி என அமெரிக்கா அறிவித்திருந்தது தெரிந்ததே.

கிளர்ச்சியாளர்களின் முன்னேற்றத்தைத் தடுப்பதற்கு உடனடிப் பாதுகாப்புத் தேவையென்று கெயிட்டி சனாதிபதி அரிஸ்டைட் அமெரிக்க சனாதிபதியிடம் வேண்டுகோள் விடுத்திருந்த போதும், அதனைச் சனாதிபதி புஷ் நிராகரித்துவிட்டதுடன், வன்முறைகள் காரணமாக கெயிட்டி மக்கள் அமெரிக்காவிற்குள் தப்பிவர வேண்டாம் என்றும் எச்சரிக்கை செய்துள்ளார்.

அப்படித் தப்பிவரும் அகதிகளைத் திருப்பி அனுப்பும்படி கடல்காவற்படைக்கு அவர் உத்தரவும் இட்டுள்ளார்.

## றொனிபிளேயர் வலியுறுத்து

ஈரான் தனது இரகசிய ஆயுதத் திட்டத்தின் முழு விபரங்களையும் அணுசக்தி ஏஜென்சியிடம் தெரிவிக்கவேண்டுமெனப் பிரிட்டிஷ் பிரதமர் றொனிபிளேயர் மீண்டும் வலியுறுத்தியுள்ளார்.



பாக்தாத்திலுள்ள பொலிஸ் பயிற்சிக் கல்லூரிக்கு அமெரிக்க பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் விஜயம் செய்த வேளை அதன் வாசல் பகுதியில் பாதுகாப்புக் கடமையிலீடுபட்டிருக்கும் அமெரிக்கத் துருப்பினர்.

# நேட்டோ நாடுகளுடனான விமானப் படைப் பயிற்சியில் இந்தியாவும் பங்குபற்ற அமெ. அழைப்பு

(புதுடில்லி)

நேட்டோ நாடுகளுடன் இடம் பெறவுள்ள விமானப்படைப் பயிற்சியில் பங்குகொள்ளுமாறு இந்தியாவிற்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

ஜூலை மாதம் இப்பயிற்சி அலாஸ்காவில் நடைபெறவுள்ளது. இதில் ஜப்பான், கனடா, பிரிட்டிஸ் ஆகிய நாடுகளும் பங்குபற்றவுள்ளன. நேட்டோ அமைப்பை ஐரோப்பிய நாடுகளின் ஆக்கிரமிப்பிலிருந்து விடுவிப்பதற்காகவே அமெரிக்கா இந்தியாவிற்கு அழைப்பு விடுத்துள்ளது. மேலைநாடுகளில் செல்வாக்கைச் செலுத்துவதற்கு இந்தியாவிற்குக் கிடைத்துள்ள அரிய வாய்ப்பாகும் இவ் அமைப்பு என்று தெரிவிக்கப்படுகின்றது.



சிங்கப்பூரில் நடைபெற்ற ஆசிய விமானப்படைக் கண்காட்சியில் கலந்து கொண்ட இந்திய விமானப்படைப் பிரிவு ஒன்றின் சாகசக் காட்சி.

# தமிழகத்தில் 3 தொகுதிகளில் வேட்பாளரை தெரிவதில் பா.ஜ.கட்சிக்கு நெருக்கடி

(சென்னை)

தமிழகத்தில் ஏழு தொகுதிகளில் போட்டியிடவுள்ள பாரதிய ஜனதாகக்கட்சி மூன்று தொகுதிகளில் போட்டியிடுவதற்கான வேட்பாளர்களை தெரிவு செய்வதற்கு பல நெருக்கடிகளை எதிர்நோக்கி வருவதாக தெரியவருகிறது.

நாடாளுமன்றத் தேர்தலில் அ.தி.மு.கவுடன் கூட்டணி அமைத்துள்ள பாரதிய ஜனதாக் கட்சி ஏழு தொகுதிகளில் போட்டியிட தீவிரமான முயற்சியில் ஈடுபட்டுள்ளது. இந்நிலையில் பாண்டிச்சேரி, நாகர் கோவில், கோவை உள்ளிட்ட நான்கு தொகுதிகளில் வேட்பாளர்களைத் தெரிவுசெய்துள்ள பா.ஜ.கட்சிக்கு சிதம்பரம், வட சென்னை, தர்மாபுரி ஆகிய தொகுதிகளில் வேட்பாளர்களைத் தெரிவு செய்வதில் நெருக்கடிகளை எதிர்கொண்டுள்ளதாக செய்திகள் தெரிவிக்கின்றன.



பலஸ்தீனக் குண்டு வெடிப்பினால் பாதிக்கப்பட்டவர்களது படங்களைத் தாங்கி சர்வதேச நீதிமன்றத்தின் முன்னால் நடத்தப்படும் ஆர்ப்பாட்டம்.



சிலோவேனியாவில் 40 சென்ரிமீற்றர் அளவு பனி கொட்டும் நிலையில் ரிவோலி பூங்காவில் விளையாடும் நாய்.



உகண்டாவில் அரச எதிர்ப்புப் படையினருக்கெதிரான இராணுவ நடவடிக்கையிலீடுபட்டுள்ள அரச படையினர்.

# பிரி. உளவுத்துறையின் செயல் குறித்து ஐ.நா. அதிகாரி கண்டனம்

(லண்டன்)

ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் கொபி அனானின் தொலைபேசி உரையாடல்களை பிரித்தானிய உளவுத்துறையினர் பதிவு செய்திருப்பதாக முன்னாள் பிரித்தானிய அமைச்சர் கிளியசார்ஸ் தெரிவித்துள்ளார்.

பிரித்தானிய உளவுத் துறையினரின் இச்செயல் சட்ட விரோதமானதென ஐக்கிய நாடுகள் சபையின் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

# யப்பானின் மற்றுமொரு தொகுதி படையணி ஈராக் சென்றது

(டோக்கியோ)

ஈராக்கிற்கு மற்றொரு தொகுதி ஜப்பானிய படைவீரர்கள் நேற்று அனுப்பப்பட்டுள்ளனர்.

இதில் 130 இராணுவ தரைப் படையினரும், இவர்களுடன் 30 வாகனங்களும் குவைத்தின் எல்லை ஊடாக ஈராக்கிற்குச் சென்றுள்ளன.

ஜப்பான் அண்மைக் காலமாக ஈராக்கின் புனர்நிர்மானப்பணிகளை மேற்கொள்வதற்கு தனது படைகளை அனுப்புவதாக கூறி வந்தமை தெரிந்ததே.

## தன்சானியா நிராகரித்தது

கிழக்கு ஆபிரிக்காவிலிருந்து பிரிட்டன் வந்து அரசியல் தஞ்சம் கோருபவர்களது விண்ணப்பங்களைத் தன்சானியாவில் வைத்துப் பரிசீலிக்கப் பிரிட்டன் அரசாங்கம் கூறிய யோசனையைத் தன்சானியா நிராகரித்துள்ளது.

# பூமி பற்றி வால்வெள்ளியில் ஆய்வு

இப்புவி எவ்வாறு தோன்றியது என்ற கேள்வி விடைகாண முடியாததொன்றாக இருக்கின்றது.இது தொடர்பாகப்பல்வேறு ஆய்வுகள் நடைபெற்றபோதும் இறுதியான/தீர்க்கமான விடை காணப்படவில்லை. அதன்காரணமாகப் பல விஞ்ஞானிகள் வால்வெள்ளிகளிலிருந்து புவி தோன்றியிருக்கலாம் எனக்கருதுகின்றனர்.


இதனை உறுதிப்படுத்திக் கொள்ளும் வகையில் 2004 ஆம் ஆண்டில் ஆய்வுக் கலம் ஒன்றை வால்வெள்ளிக்கு அனுப்பிவைக்க ஐரோப்பிய விண்வெளிமையம் தீர்மானித்துள்ளது.

**67P Churyumow** என்னும் வால்வெள்ளிக்கே மேற்படி ஆய்வுக்கலம் அனுப்பப்படவுள்ளது. இக்கலம் அனுப்பிவைக்கப்பட்டு பத்து வருடங்களின் பின்னர் அது தனது ஆய்வு பற்றிப் புவிக்கு அறிவிக்கும். 'றொசெட்டா' எனப்படும் இக்கலம் பிரான்சின் குயானாவிலிருந்து அனுப்பப்படவிருக்கிறது. இக்கலம் **(Kouveu)** 'கொவ்ரோ' என்ற ரொக்கட்டின் மூலம் செலுததப்படும். புவியீர்ப்பு வலயத்திலிருந்து அண்ட வெளிக்குச் செல்வதற்குத் தேவையான சக்தி ஏரியான் **(Arian)**-5 என்னும் ரொக்கட் எரிவதன் மூலம் வழங்கப்படும்.

இக்கலத்துக்கு 'றொசெட்டா' எனப் பெயரிட்டதன் காரணமாவது புராதன எகிப்து இராட்சியத்திலிருந்து கல்வெட்டு ஒன்று இப்பெயர்கொண்டு அழைக்கப்படுவது ஆகும். இக்கல்வெட்டு 1799 ஆம் ஆண்டில் நெப்போலியனின் படைவீரர் ஒருவரால் நைல்நதி தீரத்தில் எழுதப்பட்டதாகவும் அதன் மூலம எகிப்தின் வரலாறு கண்டுபிடிக்கப்பட்டதாகவும் அதனால் இப்பெயர்கொண்ட ஆய்வுக்கலமும் பல ஆய்வுகளை மேற்கொண்டு தகவல்களை அளிக்கும்என விஞ்ஞானிகள் நம்புகின்றனர்.

இக்கலமே முதன்முதல் வால்வெள்ளி ஒன்றில் ஆய்வு மேற்கொள்ள அனுப்பப்படும் முதலாவது கலமாகும்.

அதிநவீன தொழில்நுட்பத்துடன் தயாரிக்கப்பட்டுள்ள 'றொசெட்டா' எனப்படும் இக்கலம் 67P 'சுரியோமோவ் கெரசிமென்கோ' எனப்படும் வால்வெள்ளியில் இறங்கி அதன் தொழில்நுட்பத் திறனைக் கொண்டு 4600 மில்லியன் வருடங்கள் பழமையான புவியினதும் ஞாயிற்றுத் தொகுதியினதும் தோற்றம் பற்றி ஆய்வு நடத்திப் பெறுபேறுகளைப் புவிக்கு அனுப்பும். 2011 ஆம் ஆண்டளவில் இக்கலம் சூரியனிலிருந்து 8 ஆயிரம் மில்லியன் மைல்களுக்கும், புவியிலிருந்து ஆயிரம் மில்லியன் கி.மீற்றருக்கும் இடைப்பட்ட பிரதேசத்தில் பயணத்தை மேற்கொண்டிருக்கும். அவ்வாறு அது பிரயாணம் செய்யுமாயின் அதுவே புவியிலிருந்து அதிகூடிய தூரத்தில் பயணம் செய்யும் கலமாகும்.



சூரியனிலிருந்து மேற்படி வால் வெள்ளியின் அதிகூடிய தூரம் 887 மில்லியன் கி.மீற்றரும், அதிகுறைந்தளவு தூரம் 186 மில்லியன் கி.மீற்றருமாகும். இதன் விட்டம் 4 கி.மீ ஆகும். அங்கு செல்லும் 'றொசெட்டா' ஆய்வுக்கலம் **(Philae)** பீளே எனப்படும் றோபோவைப் பிரித்து விடும். இந்த றோபோ அங்கு ஆய்வுகளை மேற்கொண்டு தகவல்களைப் புவிக்கு அனுப்பும். இந்தத் தகவல்களின் அடிப்படையில் அண்டவெளி பற்றிய விபரம்அட்டவணை மூலம் தெரியவரும்.இதன் மூலம் ஞாயிற்றுத் தொகுதியின் தோற்றம்பற்றிய விபரங்களும் ஏற்பட்ட மாறுதல்கள் பற்றியும், எதிர்காலத்தில் எத்தகைய மாற்றங்கள் ஏற்படும் என்பது பற்றியும் தகவல்கள் வெளியாகும்.

# சர்வதேச தினங்கள்

| | | |
|---|---|---|
| * பெப்ரவரி-21 | - | சர்வதேச தாய்மொழிதினம் |
| * மார்ச்-08 | - | சர்வதேச மகளிர்தினம் |
| * மார்ச்-15 | - | உலக நுகர்வோர்தினம் |
| * மார்ச்-22 | - | உலக நீர்வளதினம் |
| * மார்ச்-24 | - | உலக காசநோய்தினம் |
| * ஏப்ரல்-07 | - | உலக சுகாதாரதினம் |
| * ஏப்ரல்-22 | - | உலக பூகோளதினம் |
| * ஏப்ரல்-23 | - | உலக பதிப்புரிமைதினம் |
| * மே-01 | - | சர்வதேச தொழிலாளர்தினம் |
| * மே-03 | - | உலக பத்திரிகை சுதந்திரதினம் |
| * மே-08 | - | உலக செஞ்சிலுவை தினம் |
| * மே-09 | - | சர்வதேச அன்னையர்தினம் |
| * மே-12 | - | சர்வதேச தாதியர்தினம் |
| * மே-15 | - | சர்வதே குடும்ப தினம் |
| * மே-17 | - | உலக தொலைத்தொடர்பு தினம் |
| * மே-21 | - | உலக கலாச்சார தினம் |
| * மே-24 | - | பொதுநலவாயதினம் |
| * மே-31 | - | உலக புகைத்தல் ஒழிப்புதினம் |
| * யு,ன்-01 | - | உலக தொடர்பாடல்தினம் |
| * யு,ன்-03 | - | உலக சூழல்தினம் |
| * யு,ன்-10 | - | சர்வதேசபோதைப்பொருள் வியாபாரதவிர்ப்புதினம் |
| * யு,ன்-20 | - | உலக அகதிகள்தினம் |
| * யு,ன்-20 | - | உலக தந்தையர்தினம் |
| * யு,ன்-26 | - | உலக போதைப்பொருள் எதிர்ப்பு தினம் |
| * யு,லை-01 | - | சர்வதேச கூட்டுறவாளர் தினம் |
| * யு,லை-05 | - | வலிப்பு நோய்தினம் |
| * யு,லை-11 | - | உலக சனத்தொகை தினம் |
| * செப்ரெம்பர்-12 | - | உலக தகவல்தொழில்நுட்ப தினம் |
| * செப்ரெம்பர்-17 | - | சர்வதேச சமாதான தினம் |
| * செப்ரெம்பர்-18 | - | உலக அமைதிதினம் |
| * செப்ரெம்பர்-22 | - | சர்வதேச எழுத்தறிவு தினம் |
| * செப்ரெம்பர்-22 | - | உலக புற்றுநோய்தினம் |
| * செப்ரெம்பர்-23 | - | உலக கடல்வாணிப தினம் |
| * செப்ரெம்பர்-27 | - | சர்வதேச சுற்றுலாதினம் |
| * ஒக்ரோபர்-01 | - | சர்வதேச இரத்ததான தினம் |
| * ஒக்ரோபர்-01 | - | சர்வதேச முதியோர்தினம் |
| * ஒக்ரோபர்-01 | - | சர்வதேச சிறுவர்தினம் |
| * ஒக்ரோபர்-03 | - | மது ஒழிப்புதினம் |
| * ஒக்ரோபர்-04 | - | உலக விலங்குகள் தினம் |
| * ஒக்ரோபர்-04 | - | உலக குடியிருப்பு தினம் |
| * ஒக்ரோபர்-06 | - | உலக ஆசிரியர்தினம் |
| * ஒக்ரோபர்-07 | - | உலக சைவ உணவு தினம் |
| * ஒக்ரோபர்-09 | - | உலக தபால்தினம் |
| * ஒக்ரோபர்-15 | - | உலக வெள்ளைப் பிரம்பு தினம் |
| * ஒக்ரோபர்-16 | - | உலக உணவு தினம் |
| * ஒக்ரோபர்-24 | - | ஐக்கிய நாடுகள் சபைதினம் |
| * ஒக்ரோபர்-31 | - | உலக சிக்கன தினம் |
| * நவம்பர் -05 | - | உலக சமுதாய தினம் |
| * டிசெம்பர் -01 | - | உலக எயிட்ஸ்தினம் |
| * டிசெம்பர் -01 | - | சமாதானத்திற்கான சர்வதேச கைதிகள்தினம் |
| * டிசம்பர் -03 | - | சர்வதேச வலுவிழந்தோர்தினம் |
| * டிசம்பர் -05 | - | பொருளாதார,சமுகஅபிவிருத்திக்கானசர்வதேச தொண்டர் தினம் |
| * டிசம்பர்-10 | - | சர்வதேச மனித உரிமைகள் தினம் |
| * டிசம்பர்-31 | - | உலக சமாதான மத்தியஸ்துவ தினம் |

# உலக வரலாற்றில் இடம்பெற்றுள்ள சிலர்

* **அக்பர்**:- 1542முதல் 1605 வரை இந்தியாவின் மொகலாய வம்சத்தின் தலைசிறந்த பேரரசராக விளங்கினார்.

* **அகஸ்டஸ்**:- கி.மு 63 முதல் கி.மு 14வரை ரோமப் பேரரசை ஆட்சி செய்தார். இவரது ஆட்சியில் ரோமபப்பேரரசு உலகில் முக்கிய இடத்தைப் பிடித்துக் கொண்டது. இவர் ஜூலியஸ் சீசரின் மருமகன்.

* **அசோகன்**:- கி.மு.273 முதல கி.மு 232வரை புகழ்மிக்க மௌரியப் பேரரசை ஆட்சி செய்த பேரசன்

* **அடால்ப் ஹிட்லர்**:- 1889 முதல் 1945 வரை நாசி கட்சியைச் சேர்ந்த ஜேர்மனிய சர்வாதிகாரி இரண்டாம் உலகப் போரைத் துவக்கியவர். போரில் தோற்று தற்கொலை செய்து கொண்டவர்.

* **அப்துல் அப்பாஸ்**:- கி.மு.749 இல் பெர்சியாவில் அப்பாசித் பேரரசை நிறுவியவர்.

* **அம்பேத்கார்**:- சிறந்த அறிவாளி, நீதிபதி, இந்திய சட்ட அமைச்சராக 1947முதல் 1951 வரை பணியாற்றினார். இந்திய அரசியல் சாசன வடிவமைப்பாளர்களுள் ஒருவர்.

* **அமுன்ட். . ன்**:- முதன் முதலில் உலகின் தென்முனையைச் சென்றடைந்த நோர்வே நாட்டு மாலுமி வாழ்ந்த காலப் பகுதி 1972-1928.

* **அரவிந்துகோஷ்**- மிகச்சிறந்த வங்காளா சிந்தனையாளர். இளமைக்காலத்தில் சுதந்திரப் போராட்டத்தில் ஈடுபட்டவர். பின்னர் இந்தியாவின் பாண்டிச்சேரியில் ஆச்சிரமம் அமைத்து துறவு பூண்டார்.

* **அலெக்சாண்டர்**:- பிப அரசரின் மகன். மாசிடோனிய மன்னர் பெர்ஷிய பேரரசை அழித்தவர். உலகின் தலைசிறந்த வெற்றியாளர் இவர் வாழ்ந்தகாலம் கி.மு.356-303.

* **எலிசபெத்**:- இங்கிலாந்தை ஒரு உலகசக்தியாக மாற்றிய இங்கிலாந்து ராணி.

* **ஐசனோவர்**:- இரண்டாம் உலகப்போரின் போது நேச நாடுகளின் தலைமைத்தளபதியாக விளங்கியவர். இவர் 1952 முதல் 1960வரை அமெரிக்காவின் அதிபராகவும் இருந்தார்.

* **குப்ளாய்கான்**- ஜெங்கிஸ் கானின் பேரன் 1216முதல் 1294 வரை சீனாவில் யுவான் பேரரசை நிர்மாணித்து ஆட்சி புரிந்தார்.

* **கொயபல்ஸ்**- ஜேர்மனிய நாசிப் படைகளின் கொள்கை பரப்பு அமைச்சர்.

* **கொலம்பஸ்**:- ஸ்பெயின் நாட்டைச் சேர்ந்த சிறந்த மலுமி அமெரிக்காவைக் கண்டுபிடித்ததும் இவரே.

* **சந்திரகுப்தர்**:- கி.பி.319 இல் இந்தியாவில் மௌரியப் பேரரசை நிறுவியவர்.

* **சன்யாட்சென்**- சீனக் குடியரசை உருவாக்கியவர்.

# தெரிந்து கொள்ள

ஐக்கிய நாடுகளின் நிறுவனங்களில் ஒன்றான உலக வானியல் கழகத்தின் (**World mete orological organization (W.M.O)** கணக்குப்படி 1800க்குப் பின்னர் வெப்பம் அதிகமாக காணப்பட்ட ஆண்டு 1998ஆம் ஆண்டு தான்.

* அடுத்த இரண்டாவது ஆண்டு 2002 தான். வரலாற்றிலேயே வெப்பம் மிகுந்த ஆண்டுகள் பத்தும் எவையென்று பார்த்தால், அவை அனைத்தும் 1987க்குப் பின்னரே வருகின்றன.

* இவற்றில் ஒன்பது சென்ற நூற்றாண்டைச் சேர்ந்தவை கடந்த 25 ஆண்டு களில் பூமி வேகமாக வெப்பமடைந்து வருவ தாக அறிவியலாளர்கள் கூறுகின்றார்கள்.

* அவுஸ்ரேலியாவில் டிங்கோ எனும் ஒருவகை நாயுண்டு. இந்த இன நாய்க்கு குரைக்கத் தெரியாது.

* செஞ்சிலுவைச் சங்கத்தின் கொடியில் சிவப்பு நிறச் சிலுவை காணப்படுகின்றது. ஆனால் மத்திய கிழக்காசியாவிலுள்ள சங்கங்கள் சிவப்பு நிறத்தில் பிறையையும், ஈரான் நாடு சிவப்பு நிறத்தில் சிங்கத்தையும் பயன்படுத்தி வருகின்றன.

* உலகில் 550 வகையான எலிகள் உள்ளன. இவற்றின் எண்ணிக்கை 600கோடிக்கும் மேலாக உள்ளது. சீனா, மெக்ஸிக்கோ, ஆபிரிக்க நாடுகளில் எலியை உணவில் சேர்த்து விரும்பி உண்கிறார்கள்.

* அமெரிக்காவில் மிகவும் உயரமான மலை மவுண்ட்விட்னி என்பது ஆகும். இதனுடைய உயரம் 14494 அடிகள் ஆகும். இந்த மலை கலிபோர்னியா மாநிலத்தில் உள்ளது.

* மிகப்பெரிய ஐஸ்கட்டி மலைகள் பனி படர்ந்து கிடக்கும் இடங்களில் தான் உருவாகின்றன. சில இடங்களில் 1500முதல் 4300 மீற்றர் நீளம் வரை கூட ஐஸ்கட்டி மலைகள் காணப்படும் இந்த ஐஸ்கட்டி மலைகளில் முக்கால் பங்கு கடலுக்குள் தான் மூழ்கிக் காணப்படும். அதனால்தான் இவற்றில் கப்பல்கள் மோதிக் கடலுள் மூழ்கிப் போகின்றன. இவ்வாறான மிகப் பெரிய ஐஸ்கட்டி மலையில் தான் டைட்டானிக் கப்பல் மோதி மூழ்கியது.

# வருங்காலத்தில் இலங்கைக்கு தென்னாபிரிக்கா ஆயுதம் விற்காது

## கல்வி அமைச்சர் கதிர் அஸ்மால்ஸ்

**இலங்கையில் முன்னெடுக்கப்பட்டுவரும் சமாதான முயற்சி மற்றும் மனித உரிமைகள் தொடர்பாகப் பாராட்டுத் தெரிவித்த தென்னாபிரிக்காவின் கல்வி அமைச்சர் கதிர் அஸ்மால்ஸ், தமது நாடு இனிவரும் காலங்களில் இலங்கைக்கு ஆயுதங்களை விற்பனை செய்யப் போவதில்லை எனவும் கூறியுள்ளார்.**

புதன்கிழமை இந்தக் கருத்தினைக் கூறிய அவர் மேலும் கூறுகையில்:-

ஆயுதங்கள் விற்பனை செய்வதற்கு எமது நாட்டின் வெளியுறவுக் கொள்கை தடையாக இருப்பதில்லை. ஆனால் தென்னாபிரிக்காவின் வெளியுறவுக் கொள்கை நேரடியாகவே இலங்கை போன்ற நாடுகளுக்கு ஆயுதங்கள் விற்பனையை நிறுத்துமாறு கேட்டுள்ளது.

சில நாடுகளுக்குத் தென்னாபிரிக்கா, ஆயுதங்களை விற்பனை செய்தாலும் வெளிநாட்டுக்கொள்கை தடையாக இருக்காது . ஆனால் நாம் ஆயுதங்களை இலங்கைக்குத் தொடர்ந்து விற்பனை செய்வதால், வெளிநாட்டுக் கொள்கை கட்டாயமாகப் பாதிப்படையும். இதற்கு நல்ல உதாரணம் அங்கே வன் ரெயல் நடக்கின்றது. நாம் எமது ஆயுத விற்பனையைத் தொடர்ந்தால் அங்கு மேலும் பாதிப்புக்கள் தான் ஏற்படும்.

இலங்கையின் ஆயுதப் பிரிவினரின் விசேட பிரிவொன்று சட்டத்தை மதித்து நடப்பதில்லையென்று அறிந்துள்ளோம்.

எனவே வேறு சில நாடுகளும் இணைந்து இலங்கைக்கு ஆயுதங்களை விற்பனை செய்வதில்லை என நாம் முடிவு செய்துள்ளோம் எனவும் அவர் கூறியுள்ளார்.

# குடாநாட்டிலுள்ள பொலிசாருக்கு மனித உரிமைகள் பற்றி பயிற்சி

(யாழ்ப்பாணம்)

யாழ். குடாநாட்டில் பணியாற்றி வரும் பொலிசாருக்கு மனித உரிமைகள் தொடர்பான அறிவை ஊட்டும் விதமாக பயிற்சிப் பட்டறைகளை இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு நடாத்திவருகின்றது.

காங்கேசன்துறையிலுள்ள பிராந்தியப் பொலிஸ் அத்தியட்சகர் பணிமனையில் நேற்றுமுதல் நான்கு தினங்களுக்கென இப் பயிற்சிப் பட்டறை இடம்பெற்றுவருகின்றது. இப்பயிற்சிப்பட்டறையில் கலந்து கொள்வதற்காக குடா நாட்டிலுள்ள அனைத்துப் பொலிஸ் நிலையங்களது பொறுப்பதிகாரிகளும் மற்றும் சிரேஷ்டபொலிஸ் அதிகாரிகளும் அழைக்கப்பட்டுள்ளனர்.

இதேவேளை இப்பயிற்சிப் பட்டறையினை நடாத்துவதற்கென இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் புலனாய்வு மற்றும் விசாரணைகள் பிரிவிற்கான பணிப்பாளர் நிமல் புஞ்சிஹேவ குடா நாட்டுக்கு வருகை தந்துள்ளார். (Inquaries Investication Branch - Director - Mr.Nimal Punc hihewa) இப் பயிற்சிப் பட்டறையினை அவருடன் இணைந்து மனித உரிமைகள் ஆணைக் குழுவின் யாழ். அலுவலக இணைப்பதிகாரி ஆர்.பி.றுவன் சந்திரசேகரவும் நடாத்திவருகின்றார்.

இப் பயிற்சிப் பட்டறை தொடர்ந்து பொலிஸ் தரப்பின் ஏனைய பிரிவினருக்கும் மனித உரிமைகள் தொடர்பான அறிவை ஊட்டும் வகையிலான பட்டறைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளதாக வும் தெரியவருகின்றது.

இதனிடையே அண்மைக் காலமாக குடா நாட்டில் பொலிஸ் நிலையங்களில் பொதுமக்கள் மீதான வன்முறைகளை பொலிசார் கட்டவிழ்த்துவிடுவதாக குற்றம் சாட்டி பல புகார்கள் பாதிக்கப்பட்ட தரப்பால் மனித உரிமைகள் ஆணைக்குழுவினால் செய்யப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (27)

# கசிப்பு விற்பனை செய்தவர் காவல்துறையால் கைது!

(கிளிநொச்சி)

விசுவமடு காவல்துறையினரால் கசிப்பு விற்பனை செய்தவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

தருமபுரம் 8ஆம் யூனிற் பகுதியில் கசிப்பு விற்பனையில் ஈடுபட்ட நபரிடம் இருந்து இரண்டு லீற்றர் கசிப்பு மீட்கப்பட்டதுடன் சட்ட நடவடிக்கைகளுக்காக முல்லைத்தீவு மாவட்ட நீதிமன்றில் முற்படுத்தபடவுள்ளார்.

கசிப்பு ஒழிப்பு நடவடிக்கையில் விசுவமடு காவல்துறையினர் மிகவும் தீவிரமாக செயற்பட்டு வருவது இங்கு குறிப்பிடத்தக்கது. (15)

# திசநாயக்க மீதான குற்றச்சாட்டு குறித்து உயர் நீதிமன்ற நீதியரசர்கள் விளக்குவர்

(கொழும்பு)

அமைச்சர் எஸ்.பி.திசநாயக்க உயர்நீதிமன்றிற்கு களங்கம் ஏற்படும் வகையில் கருத்துத் தெரிவித்ததாகக் கூறப்படும் குற்றச்சாட்டுத் தொடர்பில் உயர்நீதிமன்ற நீதியரசர்கள் விரைவில் தமது விளக்கங்களை வழங்கவுள்ளனர்.

இந்த விளக்கம் தலைமை நீதி அரசர் சரத் என். சில்வாவிடம் சமர்ப்பிக்கப்படவுள்ளது.

கடந்த நவம்பர் மாதம் 03ஆம் திகதி ஹபராதுவே பகுதியில் வைத்து எஸ்.பி. திசநாயக்க கூறிய கருத்துக்கள் நீதிமன்றத்தை அவமதிப்பதாக பிரதேசவாசிகள் மூவர் உயர் நீதி மன்றத்தில் மனுத் தாக்கல் செய்திருந்தனர். இதனை அடுத்து நேற்று முன்தினம் அமைச்சரின் உரை அடங்கிய ஒலி,ஒளி நாடாவை நீதி அரசர்கள் பார்வையிட்டனர்.

இந்த நிலையில் ஒலி,ஒளி நாடாக்களின் அடைப்படையில் அமைச்சரின் மீது குற்றப்பத்திரிகைகள் தாக்கல் செய்வதா? அல்லது அவரை விளக்கமளிக்க மன்றிற்கு அழைப்பதா? என்பது தொடர்பில் நீதி அரசர்கள் தலைமை நீதி அரசரிடம் தமது கருத்துக்களை ஒரு வாரத்துக்குள் தெரிவிக்கவுள்ளனர். (32)

# வடமேல் மா.சபை தேர்தலுக்கான வேட்புமனு நேற்றுமுதல் ஏற்பு

(கொழும்பு)

வடமேல் மாகாண சபை தேர்தலுக்கான வேட்புமனுக்களை தாக்கல் செய்யும் நடவடிக்கை நேற்றுத் தொடக்கம் எதிர்வரும் ஐந்தாம் திகதிவரை நடைபெறவுள்ளது.

வேட்பு மனுக்கள் ஏற்றுக்கொள்ளப்பட்ட பின்னர் வடமேல்மாகாண சபைக்கான தேர்தல்நடத்தப்படும் நாள் அறிவிக்கப்படுமென உதவி ஆணையாளர் தெரிவித்துள்ளார்.

### - நோவூட் விபத்து சம்பவத்தில் -

# பொலிசாரைத் தாக்கியவர்களை கண்டறிய விசேட குழு அமைப்பு!

(கொழும்பு)

பாடசாலை மாணவி ஒருவரை பேருந்து மோதி பலி கொண்டதை அடுத்து நோவூட் பகுதியில் ஏற்பட்ட வன்முறைச் சம்பவங்களின்போது நோவூட் பொலிசாரைத் தாக்கிய நபர்கள் தொடர்பான விசாரணை களை நடத்துவதற்கென இரு உதவிப் பொலிஸ் அத்தியட்சகர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.இந்த அசம்பாவிதத்தின்போது நோவூட் பொலிசாரின் ஒரு ஜீப் வண்டி முற்றாகச் சேதமடைந்ததுடன் மேலும் மூன்று ஜீப் வண்டி களும் ஒரு ட்ரக் வண்டியும் சேதமடைந்ததுடன் மாணவியை மோதி பலி கொண்ட பேருந்தும் தீக்கிரை யாக்கப்பட்டது.

இதன்போது இரண்டு பொலிசாரும் காயமடைந்ததாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.இதேவேளை, நோவூட் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி ஹட்டன் பொலிஸ் நிலையத்திற்கு மாற்றப்பட்டுள்ளதாகவும் கடந்த புதன்கிழமை பிறப்பிக்கப்பட்ட ஊரடங்குச் சட்டம் நேற்றுமுன்தினம் காலையுடன் நீக்கப்பட்டுள்ளது.

# கூட்டம்

(அலுவலக செய்தியாளர்)

கிளி. மாவட்டக் கல்விக்குழுக் கூட்டம் மற்றும் சுகாதாரக் குழுக் கூட்டம் எதிர்வரும் 2ஆம் திகதி செவ்வாய்க்கிழமை நடைபெற ஏற்பாடாகியுள்ளது.

கிளி. மாவட்ட அரச செயலகத்தில் நடைபெறவுள்ள மேற்படி கூட்டத்திற்கு அன்றைய தினம் சம்பந்தப்பட்ட திணைக்கள மற்றும் அரச, அரச சார்பற்ற நிறுவன அதிகாரிகளைத் தவறாது சமுகமளிக்கும் வண்ணம் கிளி. அரசஅதிபர் தி. இராசநாயகம் வேண்டியுள்ளார். (சோ)

# யாழ்.இளைஞர் பிரிட்டனில் நஞ்சூட்டிக் கொலை

(லண்டன்)

பிரிட்டனில் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த இளைஞர் ஒருவர் மர்மமான முறையில் உயிரிழந்துள்ளார்.

நஞ்சுகலந்த உணவு உட்கொண்டதாலேயே இவர் மரணமடைந்துள்ளார் என பிரிட்டனிலுள்ள உறவினர்கள் சந்தேகம் கொள்கின்றார்கள். இதற்கிடையில் இது தொடர்பான விசாரணைகளைப் பிரிட்டன் பொலிஸார் ஆரம்பித்துள்ளனர்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை அங்குள்ள நண்பரின் வீட்டுக்குச் சென்று உணவருந்திய சிறிது நேரத்திலேயே அவர் அந்த வீட்டிலேயே உயிரிழந்துள்ளார் என்று அந்நபரின் பெற்றோருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் மாட்டீன் லேனைச் சேர்ந்த செல்வலிங்கம் பாஸ்கரலிங்கம் (வயது-27) என்ற இளைஞரே உயிரிழந்தவராவார். இவரது சடலம் கொழும்புக்கு எடுத்துவரும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாக கூறப்படுகின்றது.

# விபத்து

(கிளிநொச்சி)

உடையயர்கட்டு தேராவில் குளக்கட்டுப் பகுதியில் அதிவேகமாக பயணித்த உந்துருளி விபத்துக்குள்ளாகியதில் அதில் பயணம் செய்தவர் படுகாயமடைந்துள்ளார்.

இச்சம்பவம் கடந்த புதன்கிழமை மாலை 5.00 மணியளவில் இடம்பெற்றது. இதில் உந்துருளி பலத்த சேதமடைந்ததுடன் உந்துருளியைச் செலுத்தி வந்தவர் படுகாயமடைந்த நிலையில் கிளிநொச்சி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார் (15)

# திலங்க சுமதிபாலவின் பிணைமனு மேல் நீதிமன்றால் நிராகரிப்பு

(கொழும்பு)

சிறிலங்கா டெலிகாம்மின் தலைவர் திலங்க சுமதிபால கோரிய பிணை மனுவை போர் முறையீட்டு நீதிமன்றம் நிராகரித்துள்ளது. திலங்க சுமதிபால, மன்றில் சமர்ப்பித்த விசேஷ மனு நேற்று முன் தினம் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

இதன்போது கருத்துரைத்த நீதிபதி சந்திரதாச நாணயக்கார, விஷேச மனுவின் அடிப்படையில் திலங்க சுமதிபாலவுக்கு பிணை வழங்க முடியாது எனக் குறிப்பிட்டார்.

திலங்க சுமதிபாலவுக்கு பிணை வழங்கப்பட்டால் அது முன்பிருந்து குடிவரவு, குடியகல்வு சட்டமீறல் குற்றச் சாட்டுக்கு உள்ளாகியுள்ள பல கைதிகளுக்கு நீதியை மறுக்கும் செயலாகும்.

அத்துடன் திலங்க சுமதிபால, பல்வேறு சந்தர்ப்பங்களில் நீதிமன்றக் கட்டளைகளை மதிக்காமல் நடந்து கொண்டமையால் நீதிபதிகள் பிரச்சினைக்கு உள்ளாவதையும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (32)

# வவுனியா வடக்கு பிரதேசத்தில் தேர்தல் ஏற்பாட்டுக்குழு அமைப்பு

(செட்டிகுளம்)

தமிழீழ விடுதலைப்புலிகள் வவுனியா வடக்கு பிரதேச தேர்தல் ஏற்பாட்டுக்குழு ஒன்றை நிறுவி யுள்ளனர். கடந்த புதன்கிழமை புளியங்குளம் பகுதியில் நடைபெற்ற நிகழ்வின் போது இந்த அமைப்பு நிறுவப்பட்டு இருப்பதாக வவுனியா மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் சி.எழிலன் தெரிவித்தார்.

38 அங்கத்தவர்களைக் கொண்ட அந்த அமைப்பில் அங்கம் வகிக்கும் மக்கள் தேர்தல் பிரச்சாரம் வாக்களிப்பது தொடர்பான வேலைத் திட்டங்களை முன்னெடுக்கவுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது. இந்த நிகழ்வில் கலந்துகொண்ட பெருமளவான மக்கள் இவ்வாறான வேலைத் திட்டங்களை முன்னெடுப்பதில் ஆர்வங்காட்டியதாகவும் தெரிவித்தார். (21)

# கட்சிப் பிரதிநிதிகளுடனான சந்திப்புக்கு தேர்தல் ஆணையாளர் ஏற்பாடு

எதிர்வரும் பொதுத் தேர்தலில் போட்டியிடும் அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகளைத் தேர்தல் ஆணையாளர் எதிர்வரும் முதலாம் திகதி பிற்பகல் மூன்று மணிக்குச் சந்திக்கவுள்ளார்.

கொழும்பில் மத்திய வங்கியின் பயிற்சி நிலையத்தில் இடம்பெறும் இந்தச் சந்திப்பில் நீதியானதும் சுதந்திரமானதுமான தேர்தலை நடத்த ஒத்துழைப்பு வழங்கும்படி தேர்தல் ஆணையாளர் சகல கட்சிகளையும் கோரவிருக்கின்றார்.

தேர்தலில் கட்சிகள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பாக இதில் தேர்தல் ஆணையாளர் கருத்துக்களைக் கேட்டறிவார்.

இந்தக் கூட்டத்தில் பொலிஸ் அதிகாரிகளும் கலந்து கொள்ளவுள்ளார்கள்.

# வவு. பொதுவைத்தியசாலையில் சிறுவர் பராமரிப்பு விடுதி

(வவுனியா)

வவுனியா பொது மருத்துவமனையில் சகல வசதிகளையும் கொண்ட சிறுவர் பராமரிப்பு விடுதி ஒன்று நேற்று முன்தினம் திறந்து வைக்கப்பட்டது.

யுனிசெப் நிறுவனத்தினால் 1.8 மில்லியன் ரூபா செலவில் இது கட்டப்பட்டுள்ளது. இதனை யுனிசெப் பிரதிநிதியான டெட்செபான் திறந்து வைத்தார்.

இதன் பின்னர் பிரதி மாகாண சுகாதார பணிமனையில் நடைபெற்ற நிகழ்வில் கலந்துகொண்டு சுகாதார வெளிக்கள உத்தியோகத்தர்களுக்கான மோட்டார் வண்டிகளை வழங்கினார். தலா 128,800 பெறுமதியான 14 மோட்டார் வண்டிகள் வழங்கப்பட்டன என்பது குறிப்பிடத்தக்கது. இந்த நிகழ்வில் வைத்தியத் துறையைச் சார்ந்தவர்களும், யுனிசெப் பிரதிநிதிகளும் கலந்து கொண்டனர் (21)

# சிரமதானம்

(மல்லாவி)

வன்னி விளாங்குளம் மாவீரர் துயிலுமில்லத்தில் மாதாந்த சிரமதானப் பணிகள் நடைபெற்று வருகின்றன. சிரமதானப் பணிகளில் கடந்த 22,23ம் திகதிகளில் 06ம்கட்டை அம்பாள்புரம் மக்களும் வடகாடு கதிரவன் குடியிருப்பு மக்களும் ஈடுபட்டனர். (24)

# உலக மகளிர் தினத்தையொட்டி விசேட சேமிப்புத் திட்டம்

## மக்கள் வங்கி ஏற்பாடு

(அலுவலக செய்தியாளர்)

உலக மகளிர் தினத்தை முன்னிட்டு கிளிநொச்சி மக்கள் வங்கியினர் பெண்களுக்கான விசேட கணக்குத் திட்டம் ஒன்றினை நடைமுறைப்படுத்தவுள்ளனர்.இதன் பிரகாரம் மார்ச் 1ஆம் திகதி முதல் மார்ச் 7ஆம் திகதி வரை மக்கள் வங்கியில் பெண்களால் ஆரம்பிக்கப்படும் புதிய சேமிப்புக் கணக்கு (வைப்பு 500 ரூபா இற்கு மேல்) மகளிர் தினத்தன்று அதிர்ஷ்டம் பார்க்கப்பட்டு வைப்புத் தொகையின் இருமடங்கு பரிசாக வழங்கப்படவுள்ளது. (சோ)

# ஊர்வலங்கள் பதாகைகளுக்கு பொலிஸ் தேர்.காரியாலயம் தடை

(கொழும்பு)

பொது ஊர்வலங்கள், வாகனப் பேரணிகள் மற்றும் வீதி களில் கட்டப்படும் பதாகைகள் அனைத்திற்கும் கடந்த திங்கட்கிழமையிலிருந்து தடை விதிக்கப்பட்டுள்ளது. பொலிஸ் தேர்தல் காரியாலயத்திலிருந்து வந்த அறிவிப்பை அடுத்தே இந்தத் தடையுத்தரவு விதிக்கப்பட்டுள்ளது.

தேர்தல் சட்டங்கள் தொடர்பாக அனைத்துப் பொலிஸ் நிலையங்களுக்கும் அறிவுறுத்தல்கள் கொடுக்கப்பட்டுள்ளன. சட்டத்தை மீறுவோர் எவரும் கைது செய்யப்படுவார்கள். அவர்களது பதவி மற்றும் கட்சித் தொடர்புகள் எவையும் கவனத்தில் எடுக்கப்படமாட்டாது.இவ்வாறு பொலிஸ் தேர்தல் காரியாலயத்தின் பொறுப்பதிகாரி தெரிவித்துள்ளார்.


மிகவிரைவில்...




விளம்பர அனுசரணை:-
கிளிநொச்சி பிரதேச வர்த்தக சங்கம் (சி-9306)


# அறுவடைக்குத் தயாரான நெல்வயல்களில் யானைகள் கூட்டம் அட்டகாசம்

யானைகளினால் கிழவன்குளப் பகுதி நெற்செய்கை பாதிக்கப்பட்டுள்ளது.

கிழவன்குளத்தின் கீழ் விதைப்புச் செய்து நெல்லினை அறுவடை செய்யத் தயாராக இருக்கும் நிலையில் கூட்டமாக யானைகள் வந்து பயிரினை அழிக்கின்றது. கடந்த 25ஆம் திகதி இ.கந்தசாமி என்பவரின் வயலினையும் துவம்சம் செய்துள்ளது. இக் குளத்தின் கீழ் 20 ஏக்கர் நெற்செய்கை செய்யப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது. (05)

# சாவகச்சேரி வைத்தியசாலை புனரமைக்காததால் மக்கள் கஷ்டம்

சாவகச்சேரி வைத்தியசாலையை புனரமைப்புச் செய்வதற்கு எந்தவொரு அமைப்பும் முன்வராததால் சாவகச்சேரி மக்கள் தமது மருத்துவத் தேவைகளைப் பூர்த்தி செய்யப் பல சிக்கல்களையும் எதிர்கொண்டுள்ளார்கள்.

கடந்த காலத்தில் ஏற்பட்ட இராணுவ ஆக்கிரமிப்பு நடவடிக்கையால் மேற்படி வைத்தியசாலை கடுமையாகச் சேதமாக்கப்பட்டுள்ளதுடன் தளபாடங்களும் சூறையாடப்பட்ட நிலையில் உள்ளது.

எனினும் மக்களின் தேவைகளைக் கருதி எஞ்சியுள்ள கட்டடத்தில் வைத்து தற்பொழுது மருத்துவசேவை வழங்கப்பட்டு வருகின்றது.

எனினும் அங்கு மருத்துவ தேவைகளுக்குரிய இடவசதிகளோ அடிப்படை மருத்துவ உபகரணங்களோ காணப்படவில்லை.

இதனால் மக்களுக்குரிய சேவையை வழங்குவதில் வைத்தியசாலை நிர்வாகத்தினரும் தமது சேவைகளைப் பெற்றுக் கொள்வதில் மக்களும் பல்வேறு சிரமங்களை எதிர்கொள்கின்றனர்.

இதேவேளை போரினால் பாதிக்கப்பட்ட இந்த வைத்தியசாலையை மீளப் புனரமைப்புச் செய்து இயங்க வைக்க அரசாங்கம் போதியளவு நிதி ஒதுக்கீட்டைச் செய்யவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (33)

# 1வது பா.உறுப்பினர் ரட்ணசிறியாம்

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் முதலாவது நாடாளுமன்ற உறுப்பினராக முன்னாள் பிரதமர் ரட்ணசிறி விக்கிரமநாயக்க நியமிக்கப்படுவார் என்று சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க கூறியுள்ளார்.ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் தலைவி என்ற வகையில் தானே இந்த நியமனத்தை வழங்கவுள்ளதாக அவர் கூறியுள்ளார்.

## 2ம் ஆண்டு நினைவஞ்சலி

பிறப்பு 15 05 1926 இறப்பு 20 02 2002



அமரர்
உயர்திரு
**கந்தையா தங்கமுத்து**

(ஊதுபத்தி என அன்பாக அழைக்கப்படும் அமரர் கந்தையாவின் மனைவி)

*அன்பின் சிகரமாய்*
*பாசத்தின் உறைவிடமே*
*மறக்க முடியாத உங்கள் பாசத்தை*
*இழந்து தவிக்கின்றோம்*
*என்றும் உங்கள்*
*ஆத்மா சாந்திக்காக இறைவனை*
*பிரார்த்திக்கின்றோம்.*

குடும்பத்தினர்.

28.02.2004 அன்று சனிக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறவிருக்கும் மதிய போசனத்தில் கலந்துகொள்ளுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்.

*க. குணசிங்கம்*
*ஏ-9 வீதி,*
*பனிக்கன்குளம்,மாங்குளம்.*

தகவல்:- மகன்.குணசிங்கம்

(4272)


PC CASE

300W /350W / 400W Power Supply

அறிமுக விலை கழிவுடன் பெறலாம் - 180ற்கு மேலான வகைகள் மெக்குறியில் மட்டுமே

(1வருட உத்தரவாதம்)



Mercury @ MICRO PC SYSTEMS

Models




கலர் Silver, Blue, White, Gray, Metalic gray, Metalic blue, Metalic silver, Ivory gold, Coffee gold.

உத்தரவாதமும் விற்பனைக்குப் பிந்திய சேவையும்

மேலதிக விபரங்களுக்கு :

கிளைகள் : வெள்ளவத்தை, கொட்டாஞ்சேனை, வவுனியா, திருகோணமலை, மட்டக்களப்பு.

MICRO PC மைக்ரோ பிசி சிஸ்டம்ஸ்

கிளிநொச்சி: கணனிமையம் (TCC) கந்தசாமி கோவிலடி.

யாழ்ப்பாணம்: 175/3. கஸ்தூரியார் வீதி. யாழ்ப்பாணம் தொலை 021 – 2225893

(சி-9405)


# விருந்து உபசார நிகழ்வு

ஒட்டுசுட்டான் மகாவித்தியாலயத்தில் 2004ஆம் ஆண்டு உயர்தரப் பரீட்சையினை எழுதும் மாணவர்களுக்கான விருந்து உபசார நிகழ்வு நடைபெற்றது.

இந்நிகழ்வு கடந்த செவ்வாய்க் கிழமை ஒட்டுசுட்டான் மகாவித்தியாலய உயர்தர மாணவர் ஒன்றியத்தின் தலைவர் செல்வன் தலைமையில் நடைபெற்றது.

இதில் கருத்துரைகளை முல்லை. மாவட்ட மாணவர் அமைப்புப் பொறுப்பாளர் புரட்சி, ஒட்டுசுட்டான் பிரதேசப் பொறுப்பாளர் ஈழவன், ஒட்டுசுட்டான் மகாவித்தியாலய அதிபர் பங்கயற்செல்வன் ஆகியோர் வழங்கினர்.

பிரதம விருந்தினராக திலீபன் மருத்துவமனைமருத்துவர்வசந்திமாலா,பொறியியலாளர்சண்முகநாதன், ஒட்டுசுட்டான் கோட்டக்கல்வி அதிகாரி ஜெயபாலன் ஆகியோர் கலந்து சிறப்பித்துள்ளனர். (05)



## சிந்தனைக்கு

இலங்கையில் வழக்கில் உள்ள அரசியல் அமைப்பு எப்போதுமே பெரும்பான்மையினரின் ஆதிக்கத்தையே சிறுபான்மையினர் மீது திணித்து வருகின்றது.

தமிழீழத்தேசியத் தலைவர்.

ஈழநாதம்
மக்கள் நாளிதழ்
யாழ். சாலை, கிளிநொச்சி. 28 -02-2004

## வாக்களிக்கும் உரிமை!

வடக்கு-கிழக்கில் அதிலும் குறிப்பாக விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியிலுமுள்ள தமிழ் மக்கள் இம்முறை தேர்தலில் தமது உணர்வுகளை வெளிப்படுத்தும் வகையில் வாக்களிக்க முற்பட்டுள்ளமையால், அவர்கள் சுதந்திரமாகவும், பாதுகாப்பாகவும் வாக்களிப்பதற்கு ஏற்றவழிவகைகளைச் செய்தல் சிறிலங்காவின் தேர்தல் ஆணையாளரின் கடமையாகும்.

'சனநாயக நாடு' ஒன்றில் மக்கள் சுதந்திரமான முறையில் தேர்தல் நடவடிக்கைகளில் பங்கேற்பதும்,வாக்களிப்பதும் அவர்களின் அடிப்படை உரிமையாகும். வேறொரு வகையில் பார்த்தால் சனநாயகத்தின் அடிப்படைத் தத்துவமே இதனை அடியொற்றியதாகவே உள்ளது என்றுகூடக் கூறலாம். அதாவது, 'மக்கள் ஆட்சி' என்பதற்கு இவ்வாக்களிப்பு என்பது அவசியமானதாகும்.

இலங்கையில் சனநாயக ஆட்சி, மக்கள் ஆட்சி என்பவையெல்லாம் இன்று எந்தளவிற்கு அர்த்தப்பாடு உடையன என்பது கேள்விக்குரியதொன்றே. ஒரு புறத்தில், அதிகாரத்தில் உள்ள வழிகள் மக்களின் ஆணை, சனநாயகப் பாரம்பரியம் என்பனவற்றைக் கேள்விக்குறியாக்கும் வகையில் செயற்படுபவர்களாகவுள்ளனர். அவர்களின் நடவடிக்கைகள் ஒரு சர்வாதிகாரியின் நடவடிக்கை போன்றதாகவுள்ளது. மக்களால் தெரிவுசெய்யப்பட்ட' அரசாங்கத்தையே அவர்கள் கவிழ்த்துவிடும் அளவிற்குச் சென்றுள்ளனர்.

மறுபுறத்தில் அதிகாரத்தில் உள்ளவர்கள் மேற்கொள்ளும் வன்முறை மோசடி என்பனவற்றால் மக்களாட்சி, மக்களின் ஆணைஎன்பவையெல்லாம் கேள்விக்குக்குரியவையாகிவிட்டன. தேர்தல் வன்முறைகள் மோசடிகள் என்பன தேர்தலின் போக்கையே தீர்மானிப்பவையாகவும், மக்களின் உணர்விற்குமானவையாகவும் இருப்பதோடு ஆட்சியை நிர்ணயம்செய்யும் அளவுக்குக் கூட வளர்ச்சி கண்டுவிட்டன.

இத்தகைய நிலைமை இலங்கையின் சனநாயகத்தில் இன்று நடைமுறையாகிவிட்டாலும், வடக்கு- கிழக்கில் தமிழ் மக்கள் இன்று வாக்களிக்க தயாராக உள்ளமை காரணமாக வாக்களிப்பதற்கு உரிய வகையிலான செயற்பாடுகளை மேற்கொள்ளுதல் என்பது தேர்தல் ஆணையாளரது கடமையாகும். இதற்கு கற்பனையிலான காரணங்களையும், சாட்டுக்களையும் நியாயங்களாக வெளிக்காட்ட முற்படுதல் கூடாது.

விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியில், தேர்தல் நடாத்துவதற்கு வாக்குச்சாவடிகளுக்கான 'பொலிஸ், பாதுகாப்புஅவசியம் வி ரத்தை முக்கியமான விடயமாக அரசதரப்பு சுட்டிக் கா டவும் அதன் அடிப்படையில் வாக்களிப்பைப்புறந்தள்ளி விடவும் முற்படுமானால் அது நியாயப்படுத்தக்கூடியதான தொரு செயலாக இருக்கமாட்டாது.

சிறிலங்கா அரச நடைமுறையில் பொலிஸ் பாதுகாப்பு வழங்கப்படும் சில விடயங்கள் மிகவும் பாதுகாப்பான முறையிலும், எவ்வித குளறுபடிகள் அற்ற முறையிலும், விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியில் நிறைவேற்றப்படுவதுண்டு.எடுத்துக்காட்டாக அரசு நடாத்தும் பொதுபரீட்சைகளைக் குறிப்பிட முடியும்.

இதேவேளை, அரசின் முழு அளவிலான பாதுகாப்புடன் செயற்படும் அரசவங்கிகள் நிதிநிறுவனங்களின் செயற்பாடுகள் கூட எந்தவித இடையூறுகள் இன்றியும் நடாத்தப்படுகின்றன. அதுவும் குறிப்பாக விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியில் உள்ள அரச நிதி நிறுவனங்கள் ஒப்பீட்டளவில் அரச கட்டுப்பாட்டுப் பகுதியில் உள்ள பொட்டகப் பாதுகாப்பைவிடக் குறைந்தளவு பாதுகாப்புடனேயே உள்ளன.

ஆகையினால் வாக்களிப்பிற்கு பாதுகாப்பு இடையூறு எனக் காரணம் கூறுவது பொருத்தப்பாடானதாக இருக்கமாட்டாது. ஆயினும் தேர்தலானது அரச அதிகாரம் என்பனவற்றுடன் சம்பந்தப்பட்டதாக இருப்பதினாலும்,பல தரப்புடன் சம்பந்தப்பட்டிருப்பதினாலும், தேர்தல் மோசடிகள், ஊழல்கள் என்பன குறித்து எழக் கூடிய குற்றச்சாட்டுகளைத் தடுத்தல் என்பதற்காகப் போதிய கண்காணிப்பாளர்களை ஏற்பாடு செய்துகொள்ளுதல் பொருத்தப்பாடானதாக இருக்க முடியும்.

இவற்றைக் கருத்தில் கொள்ளாது, வாக்களிப்பை இராணுவக்கட்டுப்பாட்டுப் பகுதிக்குள்ளேயே நடத்துவதாக இருப்பின் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் இருக்கும் மக்களுக்கு தேர்தலின் போது வாக்களிக்க உரிய வாய்ப்பு அளிக்கப்பட்டதாகவோ பாதுகாப்பு அளிக்கப்பட்டதாகவோ கொள்ளுதல் முடியாது.

ஏனெனில், விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியில் உள்ள மக்கள் வாக்களிப்பில் கலந்துகொள்ள முடியாது போவதற்கு நிரம்பவே வாய்ப்பில்லாது போகும். இதற்கு முழு அளவில் வாக்களிக்க போதியநேரம் இல்லாது போகும். நிலை, போக்குவரத்து வசதி, அதற்கான செலவீடு, பாதுகாப்பு என்பன முக்கிய காரணியாக அமைதல் கூடும். இந்நிலையில் இம்மக்களுக்கு வாக்களிப்பதற்கான உரிமை வழங்கப்பட்டதாகவோ சனநாயக நடைமுறைகள் பேணப்பட்டதாகவோ அர்த்தம் கற்பிக்கவோ, கொள்ளவோ முடியாது.

# இல. உள்விவகாரங்களில் தலையிட வேண்டாம் பிரி. அமைச்சருக்கு எச்சரிக்கிறார் கதிர்காமர்

(கொழும்பு)

இலங்கை அரசியல் விவகாரங்களில் அநாவசியமாக தலையிடவேண்டாம் என்று ஊடகத்துறை அமைச்சரும், சனாதிபதியின் அந்தரங்க ஆலோசகருமான லக்ஷ்மன் கதிர்காமர் பிரிட்டன் வெளிவிவகார அமைச்சர் மைக்கோ ஓபிரைனிற்கு கண்டனம் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் கூறுகையில், நானும் வெளிவிவகார அமைச்சராக இருந்துள் ளேன்.ஆனால் எந்தவொரு நாட்டின் உள்நாட்டு அரசியலிலும் தலையிடவில்லை.

1931ஆம் ஆண்டு தொடக்கம் இலங்கையில் ஆண்களும், பெண்களும் வாக்களித்து வருகின்றனர். அரசியலில் நாங்கள் கற்றுக்குட்டிகளல்ல. எமக்கு எவரும் அறிவுரை வழங்கத் தேவையில்லை. அதேவேளை இலங்கை மக்கள் அமைதி முயற்சிகளை குறைத்து மதிப்பிடக்கூடிய அளவுக்கு முட்டாள்களும் இல்லை.

புலிகள் யதார்த்த பூர்வமான இயக்கம் அவர்களும் அமைதி முயற்சிகளை குறைத்து மதிப்பிடமாட்டார்கள்.

சிலவேளை அரசியல் வாதிகள முட்டாள்களாக இருக்கலாம். ஆனால் மக்கள் புத்திசாலிகள். அவர்கள் அரசியல் கட்சிகளுக்கு தமது சரியான தீர்ப்பை வழங்குவார்கள் என்றும் கூறியுள்ளார்.

கடந்த செவ்வாய்க்கிழமை பிரிட்டன் வெளிவிவகார அமைச்சர் மைக்கோ ஓபிரைன் இலங்கை விவகாரம்குறித்து கருத்து வெளியிட்டிருந்தார்.

சமாதான முயற்சிகளுக்கு குந்தகம் விளைவிக்கும் வகையில் அரசியல் கட்சிகளும், கட்சிகளின் ஆதரவாளர்களும் தேர்தல் வன்முறைகளில் ஈடுபடக்கூடாது என்றும் நீதியாகவும், அமைதியாகவும் தேர்தல் நடைபெற வேண்டும் என்றும் கூறியிருந்தார்.

அத்துடன் மக்கள் மனச்சாட்சியின்படி தேர்தலில் சுதந்திரமாக வாக்களிக்க வேண்டும் என்றும் அவர் வேண்டுகோள் விடுத்திருந்தார்.

இந்தக்கருத்துத் தொடர்பாகவே அமைச்சர் கதிர்காமர் தமது அதிருப்தியையும், கண்டனத்தையும் வெளியிட்டுள்ளார்.

# இலங்கை, ஜப்பானுடன் வரி ஒப்பந்தத்திற்கு செனட்டிடம் அமெ.சனாதிபதி விண்ணப்பம்

(கொழும்பு)

அமெரிக்கா இலங்கையுடனும் ஜப்பானுடன் இருதரப்பு வரி உடன்படிக்கைகளை செய்து கொள்வதற்கான அங்கீகாரத்தை வழங்கும் படி புஷ் நிர்வாகம் அமெரிக்க செனட் சபையிடம் வலியுறுத்தி வருகின்றது.

இதனை அமெரிக்கத் திறைசேரி அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

இலங்கையுடனும் ஜப்பானுடனும் இருதரப்பு வரி உடன்படிக்கைகளை செய்து கொள்வதன் மூலம் இந்த நாடுகளுக்கிடையிலான வர்த்தக தடைகளையும், முதலீடுகளுக்கான தடைகளையும் அகற்றி சுமுகமான தொரு நிலைமையை ஏற்படுத்த முடியும் என்றும் இது சம்பந்தப்பட்ட மூன்று நாடுகளுக்கும் குறிப்பிடத்தக்க நன்மைகளை வழங்கும் என்றும் திறைசேரியின் சர்வதேச வரிஅறவீட்டுகவுன்ஸிலா பார்பரா அங்கஸ் கூறியுள்ளார்.

இலங்கையுடனான உத்தேச உடன்படிக்கை 1985ஆம் ஆண்டு கைச்சாத்திடப்பட்டிருந்த போதிலும் செனட் சபையின் அங்கீகாரம் இதுவரை பெறப்படவில்லை. அமெரிக்காவின் சர்வதேச வரிச் சட்டங்களில் ஏற்படுத்தப்பட்ட மாற்றங்களால் இந்த உடன படிக்கையிலும் சில திருத்தங்கள் செய்யப்பட வேண்டியிருப்பதே செனட் சபையின் அங்கீகாரத்தைபெறுவதில் கால தாமதத்தை • ஏற்படுத்தியுள்ளது.

ஆனால் 2002 செப்டெம்பரில் இலங்கையும் அமெரிக்காவும் செய்துகொண்ட வரிஉடன் படிக்கை 1981இல் செய்து கொள்ளப்பட்டஉடன்படிக்கையிலும் சில திருத்தங்களை ஏற்படுத்தி யுள்ளது.இதன்காரணமாகஇரு உடன் படிக்கைகளையும் செனட் அங்கீகரிக்க முடியுமென்று புஷ் நிர்வாகம் வலியுறுத்தி வருகின்றது.

# வன்முறைகளற்ற நீதியான தேர்தலை நடத்த ஜப்பானிய அரசு 31 இல.ரூபா நிதிஉதவி

(கொழும்பு)

நீதியானதும் வன்முறைகளற்றதுமான தேர்தலொன்றை நடத்த உறுதுணையாக ஜப்பான் அரசு 30 இலட்சத்து 68 ஆயிரம் ரூபாவை நிதியுதவியாக வழங்க முன்வந்துள்ளது.

இது தொடர்பான உடன்படிக்கையில் ஜப்பானியத் தூதுவர் அகியோ சூடாவும், பெப்ரல் அமைப்பின் தலைவர் கிங்ஸ்லி ரொட்ரிகோவும் கைச்சாத்திட்டுள்ளார்கள்.

தேர்தல் கண்காணிப்பாளர்களுக்கும், பொது மக்களுக்கும் தேர்தல் தொடர்பாக அறிவுறுத்தல் வெளியீடுகளுக்கென இந் நிதி செலவிடப்படவுள்ளது.

இலங்கையின் தேர்தல் சட்டங்கள், வாக்காளர்களுக்கான உரிமைகள், தேர்தல் வன்முறைகளுக்கெதிராக பொது மக்களை அறிவுறுத்தும்கையேடுகள் வெளியீடுகள், சுவரொட்டிகள் ஆகியவற்றை அச்சிட்டு வெளியிடுவதற்காக இந்நிதி பயன்படுத்தப்படவுள்ளதாக பெப்ரல் அமைப்பின் தலைவர் கிங்ஸ்லி ரொட்ரிகோ கூறியுள்ளார்.

# காணாமல்போன மீனவரை கண்டுபிடிக்க முடியவில்லை

## -கண்காணிப்புக்குழு அறிவிப்பு

(யாழ்ப்பாணம்)

பருத்தித்துறைக் கடற்பரபபில் அத்துமீறி மீன்பிடித்த இந்திய மீனவர்களால் தாக்கப்பட்ட பின்னர் காணாமல் போன வடமராட்சி மீனவரைக் கண்டுபிடிக்க கடற்படையினரும், போர் நிறுத்தக் கண்காணிப்புக்குழுவும் மேற்கொண்ட முயற்சிகளில் மீனவரைத்தேடிக் கண்டுபிடிக்க முடியாது போய்விட்டதாக போர் நிறுத்தக் கண்காணிப்புக்குழுவும் கடற்படையும் நேற்று முன்தினம் அறிவித்துள்ளன.

கடந்த திங்கட்கிழமை வடமராட்சி மீனவர் ஒருவரை வாளால்வெட்டி படுகாயப்படுத்திய இந்திய மீனவர்கள் அவரைத் தூக்கி கடலில் வீசியிருந்தனர். கடந்த சில தினங்களாக இந்த நபரைக் கடலில் தேடிய கண்காணிப் புக்குழுவும், கடற்படைஎளயும் நேற்று முன்தினம் தேடுதல் நடத்திய பின்னரே மீனவரைக் கண்டுபிடிக்க முடியவில்லை என்று அறிவித்துள்ளது.

# வாக்காளர்பட்டியலை பார்வையிடலாம்

(முல்லைத்தீவு)

தென்னமரவாடி கிராம மக்களும், மட்டக்களப்பு, மன்னார், திருகோணமலை ஆகிய மாவட்டங்களிலிருந்து இடம் பெயர்ந்த மக்களும் தங்களுடைய வாக்காளர்கள் பட்டியலை கரைதுறைப் பற்று உதவி அரச அதிபர் பணிமனையில் பார்வையிடலாம் என தெரிவிக்கப்பட்டது.

எனவே வாக்களிக்க தகுதியானவர்கள் எனக் கணிக்கப்பட்டவர் கள் தமது பெயர்களைப் பார்வையிடுமாறு வேண்டப்படுகின்றனர். (20)

# பணிப்பாளர் விபத்தில் மரணம்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு நகரில் இடம் பெற்ற வீதி விபத்தில் மண்முனைபற்று பிரதேச கோட்டக்கல்விப் பணிப்பாளர் மரணமடைந்துள்ளார்.

புதன்கிழமை மாலை இந்த விபத்து திருமலை வீதியில் நடந்துள்ளது.

# உல்லாசப் பயணவிசாவில் வேலை தேடிச்செல்ல வேண்டாம்

## வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம் அறிவுறுத்து

(கொழும்பு)

உல்லாசப் பயணம் மேற்கொள்வதாகக் கூறி தற்காலிக டூரிஸ் விசா பெற்று தென் கொரியா சென்று வேலை செய்யும் தொழிலாளர் இந்த வழிமுறையைத் தவிர்த்துக் கொள்ளுமாறு இலங்கை வெளிநாட்டு வேலை வாய்ப்பு பணியகம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

வேலைவாய்ப்புக்கென்று விசா இன்றி தென்கொரியா வில் தங்கியுள்ள இலங்கை யரை திருப்பி அனுப்பவும் தென் கொரியா நடவடிக்கை எடுத்துள்ளதாக வேலைவாய்ப்புப் பணியகத் தலைவர் ஏ-ஆர். டி.ஜயதிலக்க கூறியுள்ளார்.

அத்துடன் விசா காலவதியான பின்னரும் மேலதிகக் காலம் தங்கியிருக்கும் இலங்கையரை பெப்ரவரி மாத இறுதிக்குள் சுயமாக நாட்டை விட்டு வெளியேறும் பட்சத்தில் அவர்களுக்கு மன்னிப்பு வழங்குவதுடன் சுயமாக வெளியேறாமலிருக்கும் இலங்கையரை கைது செய்யவும், தொழில் வழங்குனர்களிடமிருந்த தண்டனப் பணம் அறவிடவும் தென்கொரியா அரசு உத்தேசத்துள்ளது.

## - தமிழீழத் தேசிய பெருவிளையாட்டு விழா -

# வெற்றி பெற்ற அணிகளுக்கு தளபதிகள் பொறுப்பாளர்கள் கேடயம் வழங்கி கௌரவிப்பு



மூன்றாவது தமிழீழ தேசிய பெருவிளையாட்டு விழாவின் இறுதி நாளான நேற்று வெற்றி பெற்ற அணிகளுக்கும், வீரவீராங்கனைகளுக்கும் விடுதலைப்புலிகளின் தளபதிகள், பொறுப்பாளர்கள் கேடயங்கள், பதக்கங்கள் வழங்கி கௌரவித்தனர். நேற்று மாலை இப்பரிசளிப்பு வைபவம் இடம்பெற்றது. காலை துடுப்பாட்ட போட்டியைத் தொடர்ந்து,

பிற்பகல் விடுதலைப்புலிகளின் உந்துருளி சிறப்புப்படையினரின் சாகஸ நிகழ்வு பார்வையாளர்களை பரவசப்படுத்தியது. தொடர்ந்து லெப் கேணல் விக்ரர் நினைவுக் கேடயத்துக்காக நடாத்தப்பெற்ற உதைபந்தாட்ட இறுதிப்போட்டிக்கு தெரிவு செய்யப்பெற்ற மன்னார்-வவுனியா அணி வீரர்கள் இப்போட்டிக்கு பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப தமிழ்ச்செல்வனுக்கு அறிமுகம் செய்து வைக்கப்பெற்றனர். இப்போட்டியில் மன்னார் அணி 1-0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று வெற்றிக்கேடயத்தை சுவீகரித்தது.



எம்.ஜேசுடிலாஸ் கோல் போட்டார். இப்போட்டிகளுக்கு நடுவர்களாக மு.வடிவேல், யோகலிங்கன், சிவநேசன், க.புவனேந்திரராசா ஆகியோர் கடமையாற்றினர்.

தொடர்ந்து தமிழீழ விளையாட்டுத்துறைப்பொறுப்பாளர் பாப்பா தலைமையில் நடைபெற்ற பரிசளிப்பு நிகழ்வில் கிளி. வலயக கல்விப் பணிப்பாளர் ப.அரியரத்தினம், தமிழ்த்தேசியக் கூட்டமைப்பைச் சேர்ந்த முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சிவாஜிலிங்கம், விடுதலைப்புலிகளின் முக்கிய உறுப்பினர் க.வே. பாலகுமாரன் ஆகியோர் உரையாற்றினர்.

வெற்றி பெற்ற வீரவீராங்கனைகளுக்கான பரிசில்களை குட்டிசிறி மோட்டார் படையணி சிறப்புத்தளபதி கேணல் பானு, வடபோர் முனை கட்டளைத்தளபதி கேணல் தீபன், கட்டளைத்தளபதிகளில் ஒருவரான கேணல் ஜெயம், மாலதி படையணியின் சிறப்புத் தளபதி கேணல் விதுஷா, சோதியா படையணியின் சிறப்புத்தளபதி கேணல் துர்க்கா, ஜெயந்தன் படையணி சிறப்புத்தளபதி ஜெனார்த்தன், தமிழீழ மகளிர் அரசியல் துறைப்பொறுப்பாளர் தமிழினி, செஞ்சோலைப் பொறுப்பாளர் ஜனனி, 2000 ஆண்டிலிருந்து 2004 ஆம் ஆண்டு வரை கொழும்பில் நடைபெற்ற மோட்டார் ஓட்டப்போட்டியில் முதலிடம் பெற்ற கந்தன்



பரமேஸ்வரன், வடகிழக்கு மாகாண விளையாட்டு அமைச்சின் உதவிப் பணிப்பாளர் ஏ.டபிள்யூ.விமலராஜன், ஆசிய விளையாட்டுப்போட்டியில் இலங்கைக்கு தங்கப்பதக்கம் பெற்றுக்கொடுத்த திரு.எதிர்வீரசிங்கம், இளந்தென்றல் வாணிபப் பொறுப்பாளர் சேரன் (நிஸாம்), தமிழீழ விளையாட்டுத்துறைப் பொறுப்பாளர் கி.பாப்பா ஆகியோர் வழங்கி கௌரவித்தனர்.

அத்துடன் இந்த விளையாட்டு விழாவில் எந்தெந்தப் போட்டிகளில் எந்தெந்த அணிகள் வெல்லும் என்பதை எதிர்வு கூறுமாறு பார்வையாளர்களிடையே நடாத்தப்பெற்ற "சொல்லுங்கள் வெல்லுங்கள்" போட்டியில் சரியான விடையை அளித்த 7 பேரில் ஒருவரான கிளிநொச்சி கிராம அபிவிருத்தி வங்கியைச்சேர்ந்த கனகலிங்கம் கௌரிசங்கருக்கு தமிழீழ விளையாட்டுத்துறைத் தலைவர் ம.பத்மநாதன் பரிசில் வழங்கிக் கௌரவித்தார். மூன்றாவது நடுவருக்கு உதவியாக அனுசரணையாக தொலைக்காட்சிப் பணியினை வழங்கி உதவிய நிதர்சனம் நிறுவனத்தைச் சேர்ந்த கிருபாகரனுக்கும் சிறப்புப்பரிசில் வழங்கப்பெற்றது.

தமிழீழ விளையாட்டுத்துறைச் செயலாளர் அன்ரன் அன்பழகன் நன்றியுரை வழங்கினார்.

---

# தருமபுரம், விசுவமடு பகுதியில் நான்கு வீதிவிபத்துக்கள்

### – பாடசாலை சிறுவர்கள் உட்பட நால்வர் காயம்

நேற்று தருமபுரம் விசுவமடுப்பகுதிகளில் நடந்த 04 வெவ்வேறு வீதிவிபத்துக்களில் பாடசாலை சிறுவன் உட்பட 04 பேர் காயமடைந்தனர்.

நண்பகல் 12.00 மணியளவில் தருமபுரம் மகாவித்தியாலயத்தில் ஆண்டு 01 கல்வி பயிலும் நி.விக்ஷன் (வயது ஆறு) பாடசாலையை விட்டு வீட்டுக்குச் செல்வதற்காக வீதியைக் கடக்கும் போது வீதியால் வந்த மோட்டார் சைக்கிள் மோதியதில் தலையில் படுகாயமடைந்து தருமபுரம் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றார்.

☐ ☐ ☐

பி.ப 1.30 மணியளவில் ரெட்பானா மாணிக்கப்பிள்ளையார் கோவிலுக்கு அருகில் துவிச்சக்கர வண்டி மோட்டார் சைக்கிள் விபத்தில் துவிச்சக்கர வண்டியில் சென்று கொண்டிருந்த 12 ஆம் கட்டை விசுவமடுவைச் சேர்ந்த ஏ.விநாயகமூர்த்தி (வயது 56) காயமடைந்து தருமபுரம் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகிறார்.

☐ ☐ ☐

மாலை 4.00 மணியளவில் விசுவமடு காவல் பணிமனைக்கு அண்மையில் பரந்தன் முல்லை சாலையில் துவிச்சக்கர வண்டி மோட்டார் சைக்கிள் விபத்தில் துவிச்சக்கர வண்டியில் சென்று கொண்டிருந்த புன்னை நீராவி விசுவமடுவைச் சேர்ந்த அப்பையா (வயது 74) படுகாயமடைந்து தருமபுரம் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக கிளி வைத்தியசாலைக்கு அனுமதிக்கப்பட்டார்.

☐ ☐ ☐

மாலை 5.00 மணியளவில் தேராவில் பகுதியில் புதுக்குடியிருப்பு பகுதியில் இருந்து பரந்தன் நோக்கி வந்து கொண்டிருந்த மோட்டார் சைக் கிள், செலுத்திய இளைஞரின் கட்டுப்பாட்டை மீறி மரத்துடன் மோதுண்டது. இதன் போது புதுக்குடியிருப்பு 07 ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த சி.சுதர்சன் (வயது 17) என்பவர் படுகாயமடைந்து தருமபுரம் வைத்தியசாலையில் சிகிச்சையளிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக கிளி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார். (14)

---

# வாக்குச் சீட்டுக்கள் அச்சிடும் பணிகள் ஆரம்பம்

(கொழும்பு)

2004ம் ஆண்டின் பொதுத்தேர்தலுக்கான வாக்குச்சீட்டுக்கள் அச்சிடும் பணிகள் நேற்று ஆரம்பமாகின. 07 மாவட்டங்களின் வேட்பாளர்களுக்கான விருப்பு இலக்கங்கள் தற்சமயம் வழங்கப்பட்டது இதன் பின்னரே 07 மாவட்டங்களுக்கான வாக்குச் சீட்டுக்கள் தற் சமயம் அச்சிடப்படுகிறதென அரசாங்க அச்சகர் நெவின் நாணயக்கார தெரிவித்தார். 22 மாவட்டங்களில் தேர்தல் நடைபெறவுள்ள போதும் இதுவரை சுமார் 07 மாவட்டங்களின் ஆவணங்களே தமக்குக் கிடைத்துள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார். இவ்வாக்குச் சீட்டுக்களை அச்சிடுவதற்காக பிரித்தானியாவிலிருந்து 25 மில்லியன் ரூபாய் பெறுமதியான விசேட கடதாசிகள் பெறப்பட்டுள்ளன. (32)

---

## தேர்தல்..

முறைப்பாடுகளையும், ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி எட்டு முறைப்பாடுகளையும் செய்துள்ளன.

இதில் சிறிய தாக்குதல் மிரட்டல் சம்பவங்கள் உட்பட முறைப்பாடுகள் இடம்பெற்றுள்ளதாகவும் பொலிஸ் தேர்தல் செயலகம் தெரிவித்துள்ளது.

நுவரெலிய, வலப்பனை, மாத்தறை, குருநாகல், ரம்புக்கனை, கிரிபத்கொடை, ஆகிய பிரதேசங்களில் இருந்தே இந்த முறைப்பாடுகள் கிடைத்துள்ளன.

## சரித்த...

சரித்த ரத்வத்தயிடம் கேட்டுள்ளார். சனாதிபதியின் கடிதத்திற்கு இரண்டு மணித்தியாலங்களுக்கிடையில் பதில் அனுப்பப்பட்டுள்ளதாகவும் பத்திரிகையில் வெளிவந்த சம்பவங்களுக்கும் தமக்கும் எந்தத்தொடர்புகளும் இல்லை எனவும் சரித்த ரத்வத்த தெரிவித்துள்ளார்.

இதேவேளை வெகுவிரைவில் அவரைப்பிரதம செயலாளர் பதவியிலிருந்து நீக்குவதற்கு சனாதிபதி தீர்மானம் எடுத்துள்ளதாக சனாதிபதி செயலகம் தெரிவித்துள்ளது.

## எவ்வித..

விடயத்திலாவது நாம் திருப்தி அடையாது விட்டால் அதனை அப்போது தெரிவிப்போம் என்றும் கதிர்காமர் தெரிவித்துள்ளார்.

இந்தப் பத்திரிகையாளர் மாநாட்டில் லக்ஷ்மன் கதிர்காமருடன் மக்கள் விடுதலை முன்னணியின் பிரச்சார செயலாளர் விமல் வீரவன்ச, மக்கள் ஐக்கிய முன்னணியின் தலைவர் தினேஷ் குணவர்த்தன உட்பட மேலும்பலர் கலந்து கொண்டனர்.

---

# ஆசிரியர் ஓய்வூதியம் இரட்டிப்பாக அதிகரிப்பு

(கொழும்பு)

சனவரி 2004ஆம் ஆண்டு முதலாம் திகதி தொடக்கம் ஆசிரியர்களின் ஓய்வூதியம் இரு மடங்காக அதிகரிக்கப்படவுள்ளது நான்கு லட்சம் ஓய்வூதியம் பெறும் ஆசிரியர்கள் இதில் நன்மைகளைப் பெறுவார்கள் என அரச நிர்வாகப் பணிப்பாளர் சபை தலைவர் வஜிர அபேவர்தன தெரிவித்துள்ளார்.

இப்பொழுது 5930 ரூபா ஓய்வு ஊதியம் பெறும் ஆசிரியர் ஒருவர் தற்பொழுது அறிவிக்கப்பட்டுள்ள ஓய்வூதியம் மாற்றத்தினால் 11,475 ரூபாவை பெறுவர். 1996ஆம் ஆண்டு டிசம்பர் 31ஆம் திகதிக்கு முன்னதாக ஓய்வு பெற்றுள்ள அனைவரும் இதில் அடங்குவார்கள் என அரசாங்க சுற்று நிருபம் அறிவித்துள்ளது. 20 வருடங்களுக்கு மேலாக ஓய்வூதியம் பெற்றுவந்த ஆசிரியர்களின் கோரிக்கைகளை பல அரசுகளுக்கு அறிவித்தும் அதில் பலன்கள் ஏற்படவில்லை ஆகவே இந்த அரசாங்கம் அதை நிறை வேற்றியுள்ளது. இது சம்பந்தமாக நிதி அமைச்சுடன் எமது அமைச்சும் ஒன்றிணைந்து இந்த ஓய்வூதியம் சம்பந்தப்பட்ட அறிக்கைகளை அமைச்சரவைக்குச சமர்ப்பித்தோம் இதனை அமைச்சரவையும் அங்கீகரித்தது. இந்த வெற்றி ரணில் விக்கிரமசிங்கவையே சாரும் என கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது. இவற்றை உடன அமுல் நடத்துமாறு சம்பந்தப்பட்ட திணைக்களங்களுக்கு சுற்று நிருபங்கள் அனுப்பப்பட்டுள்ளன.

## போராளி...

மக்களை அமைதிகாக்குமாறு கோரியதும் மக்கள் அமைதியானார்கள்.

எனினும் இச்சம்பவம் தொடர்பாக மனித உரிமைகள் ஆணைக்குழு, போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழு ஆகியவற்றில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. (33)

## மரண..

கிளி.மாவட்ட வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டு அனுமதிக்கப்பட்டனர்.

இவர்களில் நேற்றுக்காலை தெல்லிப்பளையைச் சேர்ந்த சுதாமோகன் (வயது 27) என்பவர் வைத்தியசாலையில் மரணமானார். வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த பதினான்கு பேரில் ஒருவர் நேற்று மேலதிக சிகிச்சைக்காக யாழ் போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளார்.

இவ்வாகன விபத்தில் காயமடைந்து கிளி. மாவட்ட வைத்தியசாலையில் சிகிச்சை மேற்கொள்ளப்பட்டு வருபவர்களின் பெயர் வயது பின்வருமாறு; சிவலிங்கம் (வயது54) வேதநாயகம்(வயது48) செல்வரட்ணம்(வயது36) ஜெனகன் (வயது16) எம்.சுரேஸ்(வயது18) ஆர்.சுரேஸ்(வயது15) இராமையா (வயது54) தர்மநாயகம்(வயது49) சந்திரகுமார்(வயது17) சிவகுமார் (வயது16) நவரட்ணம்(வயது38) ரூபன் (வயது14) விஜயகுமார்(வயது20) மேற்படி வாகனத்தில் பயணித்து தற்போது காயங்களுக்குள்ளான நிலையில் கிளி.மாவட்ட வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வரும் ஒருவர் இச்சம்பவம் குறித்து தெரிவிக்கையில்; வாகனச்சாரதி மிகுந்த மது போதையுடன் அதிவேகமாக மேற்படி வாகனத்தினை செலுத்தியமையின் காரணமாகவே மேற்படி சம்பவம் இடம்பெற்றது என எமது செய்தியாளரிடம் தெரிவித்திருந்தார்.

மேற்படி சம்பவம் குறித்து தமிழீழ வீதிப்போக்குவரத்துப் பிரிவினர் வாகனச் சாரதியினை கைது செய்துள்ளதுடன் விசாரணையினை மேற்கொண்டு வருகின்றனர். (சோ)